# தெளிவு

இதழ் 27 | ஏப்ரல் 2012 | விலை 25.00


## அமெரிக்காவில் மனித உரிமை பாதுகாக்கப்படும் லட்சணம்!

வால் ஸ்ட்ரீட்டில் அடியும் உதையும்! அமெரிக்காவில் ஜனநாயகம்!



## க.பொ.த.(சா.த) பரீட்சை பெறுபேறு



# 'டொப் டென்' பட்டியலில் தமிழ் மொழி மூலம் யாருமில்லை!

2011 டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய 2,70,314 பாடசாலை பரீட்சார்த்திகளில் 1,64,191 பேர் க. பொ. த உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

3908 மாணவர்கள் 9 பாடங்களிலும், 'ஏ' தரத்தில் சித்தியடைந்துள்ளனர். அதேநேரம், 9 பாடங்களிலும் சித்தியடையாத மாணவர்களின் தொகை 12,795 எனவும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

க. பொ.த சாதாரண தர பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளதை அடிப்படையாகக் கொண்டு அகில இலங்கை ரீதியில் சிறப்பு சித்தி பெற்ற முதல் 10 மாணவர்களின் பெயர்கள் வெளியிடுவதற்கான செய்தியாளர் மாநாடு 28.03.2012ல் கல்வி அமைச்சில் நடைபெற்றது. முதல் 10 இடங்களுக்கும் கொழும்பு, மாத்தறை, கண்டி, ரம்புக்கன உட்பட 13 மாணவ, மாணவிகளின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த டொப் டென் பட்டியலில் எந்தவொரு தமிழ் மொழி மூல மாணவனோ மாணவியோ தெரிவாகவில்லை. எனினும் மாவட்ட மட்டத்தில் முதல் 10 வரிசையில் வரலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகல பாடங்களிலும் 'ஏ' சித்திபெற்றவர்கள் மேல் மாகாணத்திலேயே உள்ளனர். இங்கு 2001 மாணவர்கள் சித்திபெற்றுள்ளனர். அதேபோன்று சகல பாடங்களிலும் ஆகக் கூடுதலாக 'எவ்' பெற்று சித்தியடையாதவர்களும் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளது. இங்கு 2692 பேர் 'எவ்' பெற்றுள்ளனர். வடக்கு, கிழக்கில் ஆகக் குறைவான மாணவர்களே சகல பாடங்களிலும் 'எவ்' பெற்றுள்ளனர். வடக்கில் 64 மாணவர்களும், கிழக்கில் 792 மாணவர்களும் சித்தியடையவில்லை.

14ம் பக்கம் பார்க்க...

### இஸ்ரேலிய குடியேற்றங்கள் மீது சர்வதேச விசாரணைக்கு ஐ.நா உத்தரவு:

## ஜெனீவாவில் தீர்மானம் நிறைவேற்றம்




இஸ்ரேலிய குடியேற்றத் திட்டங்கள் பலஸ்தீனர்களின் உரிமைகளை மீறுகிறதா என்பதை ஆராய்வதற்கான சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்பது உட்பட இஸ்ரேலுக்கு எதிரான 5 தீர்மானங்களை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றியது.

இது தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 36 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. 10 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் சார்பில் பாகிஸ்தான் இப்பிரேரணையை முன்வைத்தது. கியூபா, வெனிஸுலா முதலான நாடுகள் இதற்கு இணை அனுசரணை வழங்கின. நோர்வே, சுவிட்ஸர்லாந்து, இந்தியா, சீனா, ரஷ்யா ஆகியனவும் இத்தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன.

இத்தாலி, ஸ்பெய்ன், செக் குடியரசு, ஹங்கேரி, போலந்து, மோல்டாவியா, கௌதமாலா, கொஸ்டாரிக்கா, கெமரூன் உட்பட 10 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

எல்லைப் பகுதியில் இஸ்ரேலிய குடியிருப்புகளை அமைக்கும் இத்திட்டத்தின் மூலம் தங்களது பகுதியை ஆக்கிரமிக்கிறது என்பது பாலஸ்தீனத்தின் குற்றச்சாட்டு. அமெரிக்கா மட்டுமே இஸ்ரேலுக்கு ஆதரவாக அதாவது தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தது. இத்தகைய தீர்மானங்களை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு நிராகரித்துள்ளார். தங்களது பிரதேசத்தில் இத்தீர்மானம் பதற்றத்தை அதிகரிக்கும் என அவர் குறிப்பிட்டார்.

## சர்ச்சையை கிளப்பும் மோடி பற்றிய டைம் சஞ்சிகையின் கவர் ஸ்டோரி!



அமெரிக்காவின் முன்னணி சஞ்சிகையான டைம் இதழும், அமெரிக்காவில் மிகவும் செல்வாக்குப் பெற்ற ஆய்வு நிறுவனமான ப்ருக்கிங்ஸ் இன்ஸ்ட்யூசனும் குஜராத் முஸ்லிம் இனப்படுகொலையின் கதாநாயகன் மோடியைப் புகழ்ந்து தள்ளியுள்ளன.

அண்மையில் வெளியான டைம் இதழின் ஆசியா பதிப்பின் புதிய வெளியீட்டில் அட்டைப் படம் சகிதம் மோடிக்கு புகழாரம் சூட்டி இரண்டு கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக மயமாக்கப்பட்ட மாநிலமாக குஜராத்தை மாற்றியவர் என்று மோடியை புகழும் கட்டுரை, 2014-ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் பிரதமர் பதவிக்கு மோடியை தூக்கிப்பிடிக்கிறது. உத்தரபிரதேச மாநில சட்டப்பேரவை தேர்தலில் தோல்வியை தழுவிய காங்கிரஸ் கட்சிக்கும், பிரதமர் பதவிக்கு வட்டமிடும் காங்கிரஸின் இளம் தலைவர் ராகுல் காந்திக்கும் மோடி கடுமையான சவாலாக இருப்பார் என டைம் கட்டுரை கூறுகிறது.

இதேவேளை, இக்கட்டுரைகள் 2002-ஆம் ஆண்டு குஜராத் இனப்படுகொலை மூலம் இழந்த தனது இமேஜை ஈடுகட்ட மோடி நடத்தும் பிரச்சார பணியின் ஒரு பகுதி என சுட்டிக்காட்டி மனித உரிமை ஆர்வலரான டீஸ்டா செடல்வாட் உள்ளிட்டவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம் இனப் படுகொலைகள் நிகழ்ந்து அண்மையில்தான் 10 ஆண்டுகள் நிறைவுற்றன. இவ்வளவு காலம் கழிந்தபிறகும் நீதி கிடைக்காத பாதிக்கப்பட்ட மக்களின் துயரமான சூழலையும், வளர்ச்சி என்ற பெயரால் மோடி மிகைப்படுத்தி காட்டும் புள்ளி விபரங்களையும்

12ம் பக்கம் பார்க்க...



சிரியாவின் பணயத்தில் இருப்பது என்ன?-4, சனல் 4 காண்பிக்காத முஸ்லிம்களுக்கு எதிரான போர்க் குற்றங்கள்-5, இஸ்ரேல், ஈரான் மற்றும் குன்று வெடிப்புகள்-7, இயற்கையோடு நல்லுறவு- 10, ஒரு அற்புத நாகரிகத்தின் சொந்தக்காரர்கள் 11, இந்தியா ஏற்கனவே உடைந்துவிட்டது 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க. பொ. த. (சா.த) பரீட்சையில்
# கண் பார்வையற்ற மாணவி 9 ஏ சித்தி!



[illegible] மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் [illegible] மாணவி 2011 க.பொ.த.(சா.த) பரீட்சையில் 9 ஏ சித்தி பெற்று சாதனை படைத்துள்ளார்.

[illegible]

## இலங்கைக்கும் மாலைதீவுக்குமான புதிய தூதுவரை ஒபாமா நியமித்தார்



இலங்கைக்கும் மாலைதீவுக்குமான புதிய தூதுவராக வெளிநாட்டுச் சேவையைச் சேர்ந்த இராஜதந்திரியான மிஷேல் சிஸன் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வினால் நியமிக்கப்பட்டுள்ளார். வெளிநாட்டுச் சேவையில் சிரேஷ்ட நிலையிலுள்ள இவர், பக்தாத்தில் சட்ட அமுலாக்கம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கான தூதுக்குழுவின் உதவித் தலைவராக இதுவரை கடமையாற்றியவர் ஆவார்.

இலங்கைக்கான தூதுவராக சிஸன் ஈராக்கிற்கான தூதுவராக பிரெட் மக்கேக் ஆகியோரின் நியமனங்களை அறிவித்த அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, "தமது புதிய பதவிகளில் இவர்கள் வழங்கவுள்ள நிபுணத்துவ சேவையினால் எமது நாடு பெரும் நன்மையடையும்" என கூறினர்.

### வரலாற்றில் மிகப்பெரிய தவறாக அமையும்!
# அமெரிக்காவுக்கு காஸ்ட்ரோ எச்சரிக்கை!



ஈரான் மீது ராணுவத் தாக்குதல் நடத்தினால் தனது வரலாற்றிலேயே அமெரிக்கா செய்யும் மிகப்பெரும் தவறாக அமைந்துவிடும் என்று கியூபா புரட்சித் தலைவர் பிடல் காஸ்ட்ரோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கிரான்மா நாளிதழில் இது குறித்து கட்டுரையொன்றை காஸ்ட்ரோ எழுதியுள்ளார். அக்கட்டுரையில் அவர் எழுதியுள்ள விபரம் வருமாறு :

இஸ்ரேலுடன் இணைந்து கொண்டு ஈரானைத் தாக்க அமெரிக்கா முடிவெடுத்தால், அதன் வரலாற்றிலேயே மிகப்பெரிய தவறாக அமைந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. ஈரானின் அணுசக்தி மையத்தின் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்று இஸ்ரேல் வெளிப்படையாகவே அறிவித்துள்ளது. இந்த நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்ட குண்டுகளுக்காக கோடிக்கணக்கான டாலர்களை அமெரிக்கா செலவழித்திருக்கிறது.

என்னைப் பொறுத்தவரை, வரலாற்றிலேயே மிகப்பெரிய தவறை அமெரிக்கா செய்யத்தான் போகிறது. ஒரு குண்டைக்கூட பாய்ச்சாமல் ஈரான் ராணுவம் சரணடைந்துவிடும் என்று அமெரிக்கா நினைத்துக் கொண்டிருக்கிறது. அது தவறான எண்ணமாகும். அதேபோல், அணு ஆயுதங்களை ஈரான் தயாரிக்கிறது என்று பிரசாரம் பண்ணுகிறார்கள். அணுசக்தியை ஆக்கபூர்வமான பணிகளுக்கு பயன்படுத்துகிறோம் என்று ஈரான் தெளிவாகச் சொல்லி வருகிறது. அணுகுண்டைத் தயாரிக்கத் தேவையான செறிவூட்டும் தொழில்நுட்பம் ஈரானிடம் இல்லை.

அணு ஆயுத விவகாரத்தில், அமெரிக்கா இரட்டை வேடம் போட்டு வருகிறது. அமெரிக்காவின் உதவியுடன் இஸ்ரேல் அணு ஆயுதம் தயாரித்து வைத்திருக்கிறது. ஆனால், ஆக்கபூர்வமான பணிகளுக்கு அணுசக்தியைத் தயாரிக்கும் ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் கூட்டாளி நாடுகள் பொய்யான பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன. அணுஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட்டுள்ளது. அதேவேளையில், இஸ்ரேல் அதில் கைபெழுத்திடவில்லை. அந்த வகையில், அணுசக்தியைப் பயன்படுத்துவதற்கு முழு உரிமையுள்ள நாடாக ஈரான் உள்ளது. இவ்வாறு தனது கட்டுரையில் பிடல் காஸ்ட்ரோ எழுதியிருக்கிறார்.

# அமெரிக்காவிடம் அளவுக்கதிகமான அணு ஆயுதங்கள் உள்ளன! -ஒபாமா




தங்களிடம் தேவைக்கு அதிகமாகவே அணு ஆயுதங்கள் உள்ளதாக, அமெரிக்க அதிபர் ஒபாமா தெரிவித்துள்ளார். அணுசக்தி பாதுகாப்பு மாநாடு 26.03.2012ல் தென்கொரிய தலைநகர் சியோலில் துவங்கியது. இந்த மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஒபாமா, பிரதமர் மன்மோகன்சிங் உள்ளிட்ட 53 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னதாக "எங்களிடம் தேவைக்கு அதிகமாகவே அணு ஆயுதங்கள் உள்ளன. 1,500 அணு ஆயுதங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இதுதவிர அணுகுண்டு பொருத்தப்பட்ட 5 ஆயிரம் ஏவுகணைகள் உள்ளன. எனவேதான், அணு ஆயுதங்களைக் குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். இந்த விஷயத்தில், ரஷ்யாவுடன் இணைந்து செயல்பட உள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுகளில் இது தொடர்பாக மேற்கொண்ட முயற்சிகள் நல்ல பலன் அளித்து வருகின்றன. அணு ஆயுதம் தயாரிப்பதற்குரிய பொருட்கள் தேவையான அளவில் கிடைக்கின்றன. இவை பாதுகாப்பற்ற நிலையில் பல இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை பெற்று அணுகுண்டு தயாரிக்க பயங்கரவாதிகள் முயற்சிக்கின்றனர். அணு குண்டுகள், பயங்கரவாதிகளின் கையில் சிக்கி விடுமோ என்ற அச்சுறுத்தல்தான், உலகத்தை ஆட்டிப் படைக்கிறது. மேலும், அணு ஆயுத தயாரிப்புக்குத் தேவையான மூலப்பொருள் பாதுகாப்பற்ற முறையில் சில இடங்களில் உள்ளன என்பதும் எங்களுக்கு தெரியும். எனினும் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் எந்தவித அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளும் தன்மை படைத்திருப்பதால், அணு ஆயுதங்களை குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். அந்த எண்ணத்தில் இங்கே 53 நாடுகளின் தலைவர்கள் சந்திப்பில் அணு ஆயுதக் குறைப்பு பற்றி வலியுறுத்தப்படும்" என அதிபர் ஒபாமா கூறினார்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் மன்மோகன்சிங்கை, ஒபாமா கட்டியணைத்து வாழ்த்து தெரிவித்தார். சியோல் மாநாட்டில் பங்கேற்க வந்த பாகிஸ்தான் பிரதமர் கிலானி குறிப்பிடுகையில், "வடகொரியாவின் அணு சக்தி திட்டத்திற்கும் பாகிஸ்தானுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. கடந்த காலங்களில் இது போன்ற தவறான குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. இது முடிந்து போன விவகாரம். அணுசக்தி பொருட்களால் ஏற்படும் பேரழிவைத் தடுப்பதற்குரிய உபாயங்களை உலகம் கண்டறிய வேண்டும்" என்றார்.

வடகொரியா பல்வேறு நவீன ஏவுகணைகளைத் தயாரித்து வருகிறது. இந்நிலையில் அணுகுண்டை சுமந்து செல்ல வல்ல ராக்கெட்டை சோதனை செய்து வருகிறது. இந்த ராக்கெட் சோதனை தென்கொரியாவின் எல்லைப்புற ஒப்பந்தத்தை மீறுவதாக இருக்கக்கூடாது. மீறினால் அந்த ராக்கெட்டை சுட்டு வீழ்த்துவோம் என, தென் கொரிய ராணுவ அதிகாரி யூன் வோன் ஷிக் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவாவில் நடந்த வாக்களிப்பு விபரம்

| ஆதரவாக | எதிராக | நடுநிலை |
|---|---|---|
| அமெரிக்கா | சீனா | மலேசியா |
| இந்தியா | ரஷ்யா | அங்கோலா |
| நோர்வே | பங்களா தேஷ் | பொட்ஸ்வானா |
| இத்தாலி | சவூதி அரேபியா | புர்கினா பாசோ |
| லிபியா | கொங்கோ | ஜிபுட்டி |
| அவுஸ்திரியா | கியூபா | ஜோர்தான் |
| பெல்ஜியம் | ஈக்வடோர் | கிர்கிஸ்தான் |
| பெனின் | இந்தோனேசியா | செனகல் |
| கெமரூன் | குவைட் | |
| சிலி | மொரிட்டானியா | |
| கொஸ்டாரிக்கா | பிலிப்பைன்ஸ் | |
| செக் குடியரசு | கட்டார் | |
| கௌதமாலா | தாய்லாந்து | |
| ஹங்கேரி | உகண்டா | |
| மொரிசியஸ் | | |
| நைஜீரியா | | |
| பேரு | | |
| போலந்து | | |
| மோல்டோவா | | |
| ருமேனியா | | |
| ஸ்பெயின் | | |
| சுவிட்சர்லாந்து | | |
| உருகுவே | | |







# "கொலைவெறித் தாக்குதலை நிறுத்து!"

## - துருக்கியில் மாபெரும் பேரணி



11.03.2012 ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேலின் காஸாமீதான படுகொலைத் தாக்குதல்களைக் கண்டித்து துருக்கியத் தலைநகர் அன்காராவில் மாபெரும் கண்டனப் பேரணி இடம்பெற்றது.

மனித உரிமைகள் மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிரான துருக்கிய அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த எதிர்ப்புப் பேரணியில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

அண்மைக் காலமாக காஸாமீது இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் போர்விமானத் தாக்குதல்களை எதிர்த்து, "காஸாவின் அப்பாவிப் பொதுமக்கள் மீதான படுகொலைத் தாக்குதல்கள் உடனே நிறுத்தப்பட வேண்டும்!" என்ற கோரிக்கையோடு, ஆயிரக்கணக்கான துருக்கிய மனிதாபிமான ஆர்வலர்களும் சமாதானச் செயற்பாட்டாளர்களும் இஸ்ரேலியத் தூதரகமாகத் தற்காலிகமாகச் செயற்பட்டுவரும் கட்டிடத்தின்முன் அணிதிரண்டனர்.

அண்மைக் காலமாக மேற்கொள்ளப்பட்டுவரும் காஸாமீதான ஆக்கிரமிப்பு இஸ்ரேலின் கொலைவெறித் தாக்குதல்களில் இதுவரை 12 வயதுக் குழந்தை உட்பட 18 பலஸ்தீன் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹு, "தம்முடைய நாடு காஸா மீதான தாக்குதலைத் தொடரும்" எனத் தெரிவித்துள்ளமை சமாதானத்தை விரும்பும் மனிதாபிமான ஆர்வலர்களைப் பெரிதும் கொதிப்படைய வைத்துள்ளது.

"காஸாமீது ஆக்கிரமிப்பு இஸ்ரேல் மேற்கொண்டுவரும் கொலைவெறித் தாக்குதல்கள் மனித விழுமியங்களுக்கு எதிரானது என்பதோடு, முழுக்க முழுக்க காட்டுமிராண்டித்தனமானதும்கூட" எனப் பேரணியில் கலந்துகொண்ட மக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

"கடந்த ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக, ஆக்கிரமிப்பு இஸ்ரேல் காஸாமீது சட்டவிரோத முற்றுகையை அமுல்நடத்தி வருவதால், அங்கு வாழும் மக்களின் அன்றாட வாழ்வு பெரிதும் சீர்குலைந்துள்ளது. இந்நிலையில், இரண்டாவது தடவையாகவும் காஸா மீதான காட்டுமிராண்டித் தாக்குதலைத் தொடங்கியுள்ள இஸ்ரேலிய எதேச்சதிகாரப் போக்கை உலக நாடுகள் கண்டித்து, அதனைத் தடுத்து நிறுத்த முன்வரவேண்டும்" என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# "சவூதியும் கட்டாரும் பயங்கரவாதிகளுக்கு ஆதரவளிக்கின்றன": சிரியா

சிரிய அரசாங்கத்தின் மீது சர்வதேச அழுத்தத்தை அதிகரிக்கும் நோக்கில் பயங்கரவாதக் குழுக்கள் செயற்பட்டு வருவதாகவும், அவை உள்நாட்டில் படுகொலைத் தாக்குதல்களில் ஈடுபட்டு வருவதாகவும் சிரியாவின் தொலைத்தொடர்புத் தகவல்துறை அமைச்சர் அத்னான் மஹ்மூத் அண்மையில் செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

கர்ம் அல் ஸைத்தூன் பிராந்தியத்தில் பயங்கரவாதக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைத் தாக்குதல்கள் குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர், 'நம்முடைய அரசாங்கத்தின் நற்பெயரைச் சிதைக்கும் நோக்கிலான சதி நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

"ஆயுதம் தரித்த இந்தப் பயங்கரவாதக் குழுக்களுக்கு சவூதி அரேபியாவும் கட்டாரும் ஆதரவளித்துவருவது கவலையளிக்கிறது. மேற்படி பயங்கரவாதக் குழுக்களால் சிரியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் படுகொலைகளுக்கு அந்நாடுகள் பொறுப்பேற்க வேண்டும்" என சிரிய அமைச்சர் அத்னான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அண்மையில் கர்ம் அல் ஸைத்தூன் பிரதேசத்தில் இடம்பெற்ற படுகொலைத் தாக்குதல் சம்பவத்தில் சுமார் 45 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் அநேகர் சில நாட்களுக்கு முன்பே ஆயுதக் குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டிருந்தனர் என உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, "அரச தரப்பு இராணுவமே இப்படுகொலைகளின் பின்னணியில் உள்ளது" என எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டி இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் அஸாட்டின் அரசாங்கத்துக்கு எதிராக போராடும் கிளர்ச்சியாளர்களுக்கு ஜோர்தான் ஊடாக, ஆயுதங்களை சவூதி அரேபியா அனுப்பிக் கொண்டிருக்கிறது என தன்பெயரை வெளிக்காட்ட விரும்பாத ஒரு சவூதி அரேபிய ராஜதந்திர உயரதிகாரியொருவர் ஏஎப்பியிடம் தெரிவித்துள்ளார்.

சிரியாவின் படுகொலைகளை நிறுத்துவதற்கான சவூதியின் முன்முயற்சி இதுவென அவர் கூறியுள்ளார். இது தொடர்பான மேலதிக விபரங்கள் பின்னர் வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிரியாவிலுள்ள தனது தூதரகத்தை சவூதி அரேபியா மூடி இருநாட்களில் சிரிய கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதம் அனுப்பும் இத்தகவல் வெளியாகியுள்ளது. சிரிய நெருக்கடி தொடர்பாக ஜோர்தான் மன்னர் அப்துல்லாவுடன் சவூதி அரேபியா பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பஹ்ரேனில் ஆர்ப்பாட்டப் பேரணி



அண்மையில் தம் நாட்டுத் தலைநகருக்கு வெளியே அணி திரண்ட ஆயிரக்கணக்கான பஹ்ரேனிய மக்கள், தமது கலீஃபாவை பதவி விலகக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஷெய்க் ஈஸா காஸிம் அவர்களின் தலைமையில் நிகழ்த்தப்பட்ட இம் மாபெரும் பேரணியில் கலந்துகொண்ட ஆயிரக்கணக்கான மக்கள், தற்போது ஆட்சியில் உள்ள கலீஃபாவைப் பதவி விலகக் கோரும் சுலோகங்களை முழங்கியவர்களாகத் தமது கைகளில் தேசியக் கொடிகளை ஏந்திப் பிரதான வீதியில் இறங்கியிருந்தனர்.

"நாம் நம்முடைய நியாயமான கோரிக்கைகளுக்காகக் காத்திருக்கின்றோம். இவ்வளவு காலமும் நாம் மிகுந்த பொறுமையோடு இருந்துவிட்டோம். இனியும் விட்டுக்கொடுப்பது சாத்தியமில்லை" என்று பேரணிக்குத் தலைமை தாங்கிய ஷெய்க் காஸிம் செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

தற்போது சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுத்த பேரணியாளர்கள், பஹ்ரேனிய சர்வாதிகார ஆட்சியைக் கண்டித்துக் குரலெழுப்பினார்கள்.

"சர்வாதிகாரம் வேண்டாம்! பிரிவினைவாதமும் வேண்டாம்! எந்தவிதப் பாரபட்சமும் இல்லாத, பஹ்ரேனிய மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதியான ஆட்சியாளரே நமக்கு வேண்டும்" என்பது இப்பேரணியை ஒழுங்குசெய்திருந்த எதிர்த்தரப்புக் கூட்டணியான அல் விபாக் கட்சியினரின் பிரதான கோரிக்கையாக இருந்தது.

"மக்கள் சக்தி முன்னிலைப்படுத்தப் படவேண்டிய காலம் வந்துவிட்டது. சர்வதேச சட்டங்கள் மற்றும் விழுமியங்களின் அடிப்படையில் தனிமனித மற்றும் அரசியல் உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் வகையில் தேசிய நிர்வாக ஒழுங்கு கட்டமைக்கப்பட வேண்டும்" என அவர்கள் கருத்துரைத்துள்ளனர்.

பஹ்ரேன் மக்கள் தொகையில் சுமார் 50 சதவீதமானோர் கலந்துகொண்ட அரச எதிர்ப்புப் பேரணிகள் நாடளாவிய ரீதியில் இடம்பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு THELIVU 38, Moor Road, Dehiwela
Email: thelivu009@gmail.com Tp: 0114942287, 0112712843

## ஜெனீவாவும் இலங்கையும்

[illegible]

# சிரியாவில் பணயத்தில் இருப்பது என்ன?



அமெரிக்காவும் மற்ற முக்கிய சக்திகளும் சிரியாவில் கொண்டிருக்கும் உண்மையான நோக்கங்களையும் விருப்பங்களையும் சர்வதேச ஊடகங்கள் மறைக்கும் சதியில்தான் ஈடுபட்டுள்ளன. பஷிர் அல் அஸாத்தின் ஆட்சியை மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் இழைக்கிறது எனக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்று ஐ.நா.வில் நிறைவேற்றப்படுவதற்கான புதிய உந்துதலுடன், ஹோம்ஸ் நகரில் பெருகும் இறப்பு எண்ணிக்கைகள் மற்றும் சம்பவங்கள் பற்றி ஊடகங்கள் முழங்கித் தள்ளுகின்றன. இத்தகைய செய்தி ஊடகங்களின் ஏராளமான தகவல்கள் எதிர்த்தரப்பின் சமூக மற்றும் அரசியல் தன்மை பற்றிய புறநிலைப் பகுப்பாய்வை ஒதுக்குகின்றன. ஏகாதிபத்திய சக்திகளுடன் அதன் பிணைப்புக்களையும் பொருட்படுத்துவதில்லை அத்துடன் தற்போதைய நெருக்கடியின் வரலாற்று மூலங்கள் பற்றி ஆராய்வதும் இல்லை. அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் தூண்டிவிட்டுள்ள உள்நாட்டுப் போரினால் விளைந்துள்ள இறப்பு எண்ணிக்கைகள் அனைத்தும் அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகளினால் செய்யப்பட்டவையே எனக் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு லிபியாவில் இரத்தம் சிந்தி ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றத்தின் காட்சிகளைத்தான் இந்த ஒருங்கிணைந்த மக்கள் கருத்தைத் திரிக்கும், மனித உரிமைகள் என்ற பெயரில் இராணுவத் தலையீட்டிற்கு ஆதரவைத் திரட்டும் பிரசாரத்திற்கு முயல்கிறது. அவர்களது உடனடிக் கோரிக்கை, மனிதாபிமான அமைப்புகளை நிறுவி, அவைகள் வளைகுடா நாடுகள், துருக்கி மற்றும் நேட்டோ ஆகியவற்றால் இராணுவத்தின் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும், என்பதோடு எதிர்த்தரப்பிற்கு ஆயுதங்கள் வழங்க வேண்டும் என்பதுமாகும்.

தொழிலாளர்களும் இளைஞர்களும் அவர்களுடைய மனிதாபிமான உள்ளுணர்வுகளை இழிந்த முறையில் தூண்டி மற்றொரு காலனித்துவ தலையீட்டிற்கு அவர்களின் ஆதரவை இழுக்கும் இந்த முயற்சிகள் அனைத்தையும் நிராகரிக்க வேண்டும். சிரியா உறுதி குலைக்கப்படுவது என்பது அஸாத்திற்கு எதிரான வெகுஜன மக்கள் எழுச்சிகளின் விளைவினால் அல்ல. எகிப்தில் வெடித்த புரட்சிகர இயக்கத்தைப் போல் இல்லாமல், சிரிய எதிர்ப்பிற்கு முக்கிய நகர்ப்புற மையங்களான டமாஸ்கஸ், அலெப்போ போன்றவற்றில் எந்தவித ஆதரவும் கிடையாது.

அஸாத்தின் அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக எதிர்ப்புக்கள் தொடங்கியவுடன், வாஷிங்டன் பிராந்திய சக்திகளான சவுதி அரேபியா, கட்டார், துருக்கி ஆகியவற்றுடன் இணைந்து ஒரு வலதுசாரிக் குழுங்குழுவாத எதிர்த்தரப்பிற்கு ஆட்சியைக் கைமாற்ற வேண்டும் என்பதற்கான முஸ்தீபுகள் தொடங்கிவிட்டன. சிரியாவிற்கு உபதேசிக்கும் பல செய்தியாளர்களுக்கு, மனிதாபிமான அக்கறைகள் ஒன்றும் எதிர்த்தரப்பிற்கு மேற்கத்தைய ஆதரவைத் தூண்டிவிடவில்லை என்பது நன்கு தெரியும். பெப்ரவரி 26ஆம் திகதி நியூயோர்க் டைம்ஸில், சிரியாவில் நடக்கும் மோதல் ஏற்கனவே அப்பிராந்தியத்திலும் அதற்கு அப்பாலும் இருக்கும் முக்கிய சக்திகளின் பதவிப் போர் ஆகிவிட்டது என்பதை அதன் ஆசிரியர் ஒப்புக்கொண்டுள்ளார். வாஷிங்டன், ஐரோப்பா மற்றும் சவுதி அரேபியா மற்றும் வளைகுடா நாடுகளைப் பொறுத்தவரை, அஸாத்தின் விதியைப் போலவே ஈரான் மீதான தாக்குதலுக்கான பாதிப்பும் முக்கியத்துவம் கொண்டது என அவர் கூறுகிறார். மத்திய கிழக்கு பற்றிய பிரெஞ்சு வரலாற்றாளர் ஜ எர்லாஞ்சர் என்பவர் "அரபு வசந்தம் என்று அழைக்கப்படுவதினால், அப்பிராந்தியத்தின் பூகோள மூலோபாயக் கருத்தை மாற்றக்கூடிய ஒரே நாடு சிரியாதான் எனலாம்.... இந்த ஆட்சி கவிழ்க்கப்பட்டால், நமக்கு முற்றிலும் மாறுபட்ட புதிய தரைத் தோற்றத்தை ஏற்படுத்திவிடும்." என்கிறார். தரைத் தோற்றத்தை மாற்றுவது என்பதின் பொருள் ஈரானைத் தனிமைப்படுத்துவது என்பதாகும். அதுதான் எண்ணெய் வளமுடைய மத்திய கிழக்கு, மத்திய ஆசியா ஆகியவை இணையும் இடத்தில் உள்ளது. அதை அகற்றுவது என்பது இப்பிராந்தியத்தில் அமெரிக்க மூலோபாயத்தை நிறுவுவதில் உள்ள தடையை அகற்றுவது என்ற பொருளைத் தரும்.

இந்த இலக்கைச் சாதிப்பதற்கு அஸாத்தை இராணுவத்தின் மூலம் அகற்றும் திட்டங்கள் செய்தி ஊடகத்திடம் தொடர்ந்து கசியவிடப்பட்டு வருகின்றன. இவைகள் பொதுமக்கள் கருத்துக்களை அடுத்து என்ன வரப்போகிறது என்பதை ஆராய்கின்றன. சவுதி அரேபிய அரச குடும்பத்துடன் பிணைந்துள்ள பெயரிடப்படாத அமெரிக்க இராணுவ ஆதாரம் ஒன்றை மேற்கோளிட்டு, பென்டகன் சிரியா மீது தலையீடத் தயாரித்து வருகிறது என்றும் இது 1998 இல் கொசோவோ மூலோபாயத்தைத் தளம் கொண்டிருக்கும் என்றும் தகவல் கொடுத்துள்ளது. இது முதலில் ஒரு பாதுகாப்புப் பகுதியை துருக்கி எல்லைக்கு அருகே நிறுவுவதின் மூலம் தொடங்கும். அதற்குப்பின் மனிதாபிமான உதவி... முதலில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அதன்பின் நேட்டோ சக்திகள் துருக்கியில் இருந்து செயற்படுவது தொடங்கும்.

இது கொசோவோவில் ஒரு பிரத்தியேகமான வான் ஒதுக்கீட்டுப் பகுதி ஏற்படுத்தப்பட்டது மற்றும் ஈராக்கில் முன்னாள் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் அகற்றப்படுவதற்கு முன் சுமத்தப்பட்டது ஆகியவை போன்றவற்றிற்கு வழிவகுக்கும். ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணையமானது ஹோம்ஸ், தெரா, ஜபடானி இன்னும் பல பகுதிகளுக்கு உதவி தருவதற்கு மனிதாபிமான அமைப்புகளை நிறுவும் அழைப்பிற்கு ஒப்புதல் கொடுக்க உள்ளது. அதன் பின் மற்றொரு வரைவுத் தீர்மானம் ஒன்றை, இப்பகுதிக்குள் செல்வதற்கான தேவை குறித்ததை ஐநா. பாதுகாப்புச் சபைக்கு அளிக்கப்படும்.

இதுவரை மேற்கத்தைய சக்திகளின் கரங்களைக் கட்டிப்போட்டு வைத்திருப்பது மாஸ்கோ மற்றும் பெய்ஜிங் உடைய எதிர்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் அல்ல. சிரிய எதிர்ப்பில் இருக்கும் அறியப்பட்டுள்ள அல்கைதாப்டா கூறுபாடுகள் இருப்பது என்றும் எங்கடமும் அல்ல. லிபியாவில் அத்தகைய சக்திகளுடன் அமெரிக்கா மற்றும் அதன் ஐரோப்பிய நட்பு நாடுகள் இணைந்து செயல்பட்டன.

பெப்ரவரியில் அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் ஹிலாரி கிளின்டன் ஒப்புக்கொண்டுள்ளபடி, வெளி தலையீட்டிற்கு எதிர்ப்பானது சிரியாவிற்குள் மட்டும் அல்லாமல் சிரியாவிற்கு வெளியேயும் இருப்பது என்பது ஓர் உண்மை.

தற்பொழுது எந்த ஒரு அரசியல் சக்தியும், போருக்கு கிளின்டன் மேற்கொள்ளும் பொது விரோதம் குறித்து கருத்துக்களைக் கூறவில்லை. வெற்றுத்தன அரபு ஆட்சிகளோ மற்றும் குறைந்தபட்சம், பல சிறிய, பெரிய போலி இடது கட்சிகளோ, ஒருகாலத்தில் சோசலிஸ்ட், ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள் என்று கூறிக் கொண்டவையோ அல்ல.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் பரந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்கள் வெளிப்பட்டதை அடுத்து நேரடிக் காலனித்துவ ஆட்சியிலிருந்து பின்வாங்க வேண்டியதாயிற்று. சோவியத் ஒன்றியத்தில் ஸ்ராலினிச சீரழிவு இருந்தபோதிலும், அவை 1917 ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சியில் இருந்து ஊக்கம் பெற்றன.

அங்கெல்லாம் நிறுவப்பட்ட முதலாளித்துவ ஆட்சிகள், ஏகாதிபத்தியத்திலிருந்து தொழிலாள வர்க்கம் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் உண்மையான விடுதலையை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. ஆயினும் கூட தன் ஆட்சிக்கு இத்தகைய சவால் குறித்து வாஷிங்டன் மனக்காயம் உற்று தன் கட்டுப்பாட்டை, இரத்தக்களரித் தலையீடுகள், இரகசிய, நேரடிப் போர்கள் மற்றும் வலதுசாரி இயக்கங்கள், ஆட்சிகளுக்கு ஆகியவற்றிற்கு ஆதரவு என்னும் முறையில் மீண்டும் நிறுவ முற்பட்டது. மாஸ்கோவைப் பொறுத்தவரை, ஒரு மிகப் பெரிய சக்தி என்னும் நிலை முடிவுக்கு வந்துவிட்டதை அது கண்டது. இதையொட்டி அதற்குத் தன் இராணுவ மேலாதிக்க நிலையைப் பயன்படுத்தித் தடையற்ற சுதந்திரமும் முக்கியமான எண்ணெய் உற்பத்தி செய்யும் மூலோபாயப் பிராந்தியங்களிலும் தன் மேலாதிக்கத்தை நிறுவ வாய்ப்பு கிடைத்துள்ளது.

இதைத் தொடர்ந்துதான் பொஸ்னியா, கொசோவோ, ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் லிபியாவில் தலையீடுகள் ஏற்பட்டுள்ளன. தற்போதைய நவ காலனித்துவ ஆதிக்கத்திற்கான புதிய சுற்றுப் போர்கள் பெருமளவில் சமூக ஜனநாயகவாதிகள், பசுமைவாதிகள், தாராளவாதிகள் மற்றும் பல போலி சோசலிசக் குழுக்கள் ஆகியவற்றின் பின் ஆதரவில் வந்திருக்கும் நிலையைக் கொண்டுள்ளன. இவைகளனைத்தும் தங்கள் நிலைப்பாட்டை நியாயப்படுத்துவதற்காக வாஷிங்டன், லண்டன், பாரிஸ் மற்றும் பேர்லினுடைய உயர்விழுமியம் எனக் காட்டிக் கொள்வதை எதிரொலிக்கின்றன. மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் என்று ஒவ்வொரு புதிய போருக்குமான ஆதாரம் என்பதற்கு கடந்த போரில் நடந்த குற்றங்களைப் பற்றிய ஞாபகமறதி தேவைப்படுகிறது.

அண்மையில், கிளின்டன் அசாத்தை ஒரு போர்க் குற்றவாளி என்று விவரித்தார். ஆனால் அமெரிக்கா நிகழ்த்தியுள்ள போர்க் குற்றங்கள், 2004 இல் ஈராக்கிய நகரம் பல்லூஜாவைத் தகர்த்தது என்பது அசாத் செய்யும் எதையும் அற்பமானதாக்கிவிடும் என்பதையும் உலகம் அறியும். சிரியாவிற்கு எதிரான போர் என்பது ஈரான் மீது இலக்கு வைப்பதற்கான படியாகத்தான் இருக்கும். இது ஏற்கனவே மத்திய கிழக்கை சுன்னி ஷியா அச்சின்படி இரு பிரிவுகளாகச் செய்துவிட்டது. இது விரைவில் ஒரு பிராந்திய மோதலை நேரடி மோதல் ஒன்றை அமெரிக்காவிற்கும், சிரியா மற்றும் ஈரானின் மூலோபாய பங்காளிகளான ரஷ்யா சீனா ஆகியவற்றிற்கும் இடையே ஏற்படுத்தக்கூடும்.

எனவே உலகின் முற்போக்கு சக்திகள் ஒன்றுபட்டு போர் வெறியர்களுக்கு பின்வரும் பதிலிறுப்பைக் கொடுக்குமாறு அழைப்பு விடுக்க வேண்டும். அதாவது சிரியாவின் மீது கை வைக்காதே ! சிரிய மக்கள்தான் தங்கள் வருங்காலத்தை நிர்ணயிக்க வேண்டுமே ஒழிய, எண்ணெய் வாசனையை மூக்குகளில் கொண்டுள்ள கொள்ளைக் கூட்டத்தினர் அல்ல.

தகவல்: உலக சோஷலிச இணையத் தளம்

# சனல் 4 தொலைக்காட்சி காண்பிக்காத புலிகளின் முஸ்லிம்களுக்கு எதிரான போர்க்குற்றங்கள்



வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் வெறிபிடித்த அலைந்த பாசிச விடுதலைப் புலிகள் கடந்த காலங்களில் முஸ்லிம்கள் மீது மேற்கொண்ட அராஜகங்கள் பல.

சர்வதேச சமூகமும் மேகத்திய ஊடகங்களும் விடுதலைப் புலிகளின் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான இந்த அக்கிரமங்களை இதுவரை கண்டுகொள்வில்லை. முஸ்லிம் சமூகமும் புலிகள் மேற்கொண்ட அந்த அராஜக நிகழ்வுகளை உலகிற்கு உரியவகையில் எடுத்துக்கூற தவறியுள்ளது.

இந்நிலையில்தான் அண்மையில் பிரிட்டனில் இருந்து செயற்படும் சனல் 4 தொலைக்காட்சி இலங்கை அரசாங்கப் படைகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக போர்க்குற்றம் புரிந்ததாககூறி சில ஆவணப்படங்களை மீண்டும் காண்பித்தது.

முஸ்லிம்களாகிய நாமும் சனல் 4 உள்ளிட்ட சர்வதேச ஊடகங்களுக்கு பயங்கரவாதப் புலிகள் மேற்கொண்ட இந்த அக்கிரமங்களையும் போர்க் குற்றங்களையும் அம்பலப்படுத்தும் செயற்பாட்டில் குதிக்கவேண்டும். புலிகள் மேற்கொண்ட இந்த அக்கிரமங்களை உங்கள் பேஸ்புக் மற்றும் டுவிட்டர் உள்ளிட்ட ஏனைய இணையத் தளங்களிலும் பதிவுசெய்யுமாறு அன்புடன் அழைக்கிறோம்..!!

இரத்தத்தாலும் கண்ணீராலும் எழுதப்பட்ட சோக வரலாற்று நிகழ்வு இது. 1990ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வடக்கில் வாழ்ந்து வந்த சுமார் 78ஆயிரம் முஸ்லிம் மக்கள் வடக்குக்கு வெளியே புலிகளால் விரட்டப்பட்டனர். யாழ்ப்பாணத்துக்கு வெளியே ஏனைய மாவட்டங்களில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் தமது வாழ்விடங்களைவிட்டு வெளியேற 48 மணிநேர அவகாசம் வழங்கப்பட்டது. யாழ் நகர முஸ்லிம்களுக்கு இரண்டே இரண்டு மணிநேரமே கால அவகாசம் வழங்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முப்பதாம் திகதி யாழ் நகரப் பகுதிகளில் உறுமிக் கொண்டிருந்த புலிகளின் வாகனங்களிலிருந்த ஒலிபெருக்கிகள் அலறிக்கொண்டிருந்தன.

"யாழ் நகரத்தில் வாழும் அனைத்து முஸ்லிம்களும் வட மாகாணத்துக்கு வெளியே செல்ல வேண்டும். உடுத்த உடுப்புடனும் ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத பணத்துடனும் அனைத்து முஸ்லிம்களையும் யாழ் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு வருமாறு இத்தால் அறிவுறுத்தல் விடுக்கப்படுகிறது. இந்த உத்தரவை மீறி நடப்பவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்படும்"

இதுதான் புலிகளின் அந்த அறிவுறுத்தல்.



ஒஸ்மானியாக் கல்லூரியில் கூடிய அனைத்து முஸ்லிம்களும் லொறிகளில் ஏற்றப்பட்டு வட மாகாணத்துக்கு வெளியே கொண்டு சென்று விடுவிக்கப்பட்டனர். 1981ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி யாழ் நகரத்தில் மட்டும் வாழ்ந்த முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை 14,844.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் சுமார் 78ஆயிரம் முஸ்லிம் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். யாழ் நகர முஸ்லிம் மக்களை இரண்டு மணித்தியால கால அவகாசத்தில் வெளியேற்றிய புலிகள், முப்பதாம் திகதிக்கு முன்னதாகவே வடக்கின் ஏனைய மாவட்டங்களில் வாழ்ந்த முஸ்லிம்களை வெளியேற்றினார்கள்.



முதன் முதலாக யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் 12 மைல்கள் அப்பாலுள்ள சாவகச்சேரியில் வாழ்ந்து வந்த சுமார் 1500 முஸ்லிம்கள் விரட்டப்பட்டனர். இது அக்டோபர் மாதம் 28ஆம் திகதி இடம்பெற்றது. இதன் பின்னர் கிளிநொச்சி, மன்னார் என்று அனைத்து வடபுல மாவட்டங்களிலிருந்தும் விரட்டப்பட்டனர்.வடக்கிலிருந்து முஸ்லிம் மக்களை விரட்டுவதற்கு முன்னதாகவே கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்செயல்களைப் புலிகள் கட்டவிழ்த்து விட்டிருந்தனர். 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி கிழக்கில் காத்தான்குடியிலுள்ள இரண்டு பள்ளிவாசல்களுக்குள் வைத்து 140 முஸ்லிம்களைப் புலிகள் சுட்டுக்கொன்றனர்.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை காத்தான்குடி ஹுசைனியா பள்ளிவாசலுக்குள்ளும் மீரா ஜும்மாப் பள்ளிவாசலுக்குள்ளும் ஆயுதபாணிகளாகப் புகுந்த புலிகள் தொழுதுகொண்டிருந்த அப்பாவி முஸ்லிம்களைச் சுட்டுக் கொன்றனர். இத் தாக்குதலின்போது சுமார் 70 முஸ்லிம்கள் காயங்களுக்கு இலக்கானார்கள்.

இக் கொடூரம் இடம்பெற்றுச் சரியாக ஒன்பது நாட்களுக்குப் பின்னர் மற்றொரு இரத்த வேட்டையைப் புலிகள் நடத்தினார்கள். ஏறாவூர், பிச்சிநகர் என்ற முஸ்லிம் கிராமத்துக்குள் ஆயுததாரிகளாகப் புகுந்த புலிகள் 118 முஸ்லிம் மக்களைச் சுட்டும் வெட்டியும் கொன்றனர். இந்த ஈனத்தனமான நடவடிக்கையின்போது கொல்லப்பட்டவர்களில் 51 பேர் ஆண்கள், 36 பேர் பெண்கள், 31 பேர் பிள்ளைகள். நகைகளையும் பெறுமதி வாய்ந்த பொருட்களையும்கூடப் புலிகள் கொள்ளையடித்துச் சென்றனர். மட்டக்களப்பு – பொலநறுவை வீதியில் ஏறாவூர் அமைந்துள்ளது. மட்டக்களப்பிலிருந்து ஒன்பது மைல்கள் அப்பால் ஏறாவூர் உள்ளது. பிச்சிநகர்ப் படுகொலை ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி நடைபெற்றது.

1990ஆம் ஆண்டு கிழக்கில் சுமார் ஐநூறுக்கு மேற்பட்ட முஸ்லிம்களைப் புலிகள் சுட்டுக் கொன்றனர். அந்த வருடம் ஜுலை மாதம் முப்பதாம் திகதி அக்கரைப்பற்றில் 14 முஸ்லிம்கள் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஆகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி அம்பாறை, முள்ளியன்காடு என்ற கிராமத்தில் வயல்வெளியில் வேலை செய்துகொண்டிருந்த 17 முஸ்லிம் விவசாயிகளைப் புலிகள் சுட்டுக் கொன்றனர். மறுநாள் ஆறாம் திகதி அம்பாறையில் மேலும் 33 முஸ்லிம் விவசாயிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 15ஆம் திகதி அம்பாறை, அரந்தலா வைக்கு அருகேயுள்ள முஸ்லிம் கிராமமொன்றுக்குள் புகுந்த புலிகள் ஒன்பது முஸ்லிம்களைச் சுட்டுக் கொன்றனர். இவற்றை விடவும் மேலும் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படுகொலைச் சம்பவங்கள் இடம் பெற்றிருக்கின்றன. வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் விரட்டப்படுவதற்குச் சில மாதங்கள் முன்னதாக 35 முஸ்லிம் வர்த்தகர்களைப் புலிகள் கடத்திச் சென்றனர். கப்பம் கோரியே இந்த வடபகுதி முஸ்லிம் வர்த்தகர்கள் கடத்தப்பட்டனர். இவர்களில் 18 பேர் கடத்தப்பட்டுச் சில மாதங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். ஏனைய 17 வர்த்தகர்களுக்கும் என்ன நடந்ததென்ற மர்மம் இன்றுவரை மூடுமந்திரமாகவே இருக்கிறது. புலிகளுக்குக் கப்பம் வழங்கிய வர்த்தகர்கள் மட்டுமே விடுவிக்கப்பட்டனர்.

வடக்கிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் மக்கள் புத்தளம், அநுராதபுரம், குருநாகல் உட்படப் பல தென்னிலங்கைப் பகுதிகளில் 150இற்கு மேற்பட்ட அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்தனர். இருபது வருடங்கள் கழிந்துவிட்ட இன்றைய நிலையில் அந்த மக்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகியுள்ளது. இன்னமும் அந்த மக்கள் தமது சொந்த வாழ்விடங்களில் முற்று முழுதாக மீள்குடியேற்றப் படவில்லை என்ற நிலைமை தொடரத்தான் செய்கிறது. .

நன்றி : யாழ் முஸ்லிம்

# அல் ஜெஸீரா நடுநிலை தவறுகிறதா?

"மத்தியகிழக்கு நாடுகளின் அரசியல் விவகாரங்கள் தொடர்பான செய்திகளை வெளியிடுவதில் "அல்ஜெஸீரா" செய்திச் சேவை ஒருதலைப்பட்சமாகச் செயற்படுகின்றது" எனக் குற்றஞ்சாட்டி, மத்திய கிழக்கின் மற்றொரு முன்னணிச் செய்தி நிறுவனமாகிய "ப்ரஸ்" தொலைக்காட்சிச் சேவை திடுக்கிடும் தகவல் வெளியிட்டுள்ளது.

"அண்மைக் காலமாய் டுனீஸியா, எகிப்து, லிபியா முதலான மத்திய கிழக்கு நாடுகளில் இடம்பெற்ற அரசியல் கொந்தளிப்பு நிலைமைகள், அந்நாடுகளில் வெடித்த மக்கள் புரட்சிகள் குறித்து மிகச் சிறப்பான செய்திச் சேவையை வழங்கி உலகெங்கிலும் மிகப் பிரமாதமான வரவேற்பைப் பெற்றுக் கொண்ட அல் ஜெஸீரா செய்திச் சேவையின் போக்கில் சமீப காலமாய் ஏற்பட்டுவரும் ஒருதலைப்பட்சமான போக்கினால் மனமுடைந்துபோன பல செய்தியாளர்கள் தமது பணியை ராஜினாமா செய்துவருகின்றனர்" என ஈரானிய செய்தி நிறுவனமான "ப்ரஸ்" செய்திச் சேவை குறிப்பிடுகின்றது.

"கத்தாரை மையமாகக் கொண்டு இயங்கும் அல் ஜெஸீரா, பஹ்ரைன் மற்றும் சிரியாவில் இடம்பெற்று வரும் மக்கள் புரட்சிகளின் உண்மையான கள நிலைவரங்கள் குறித்து நடுநிலையாகச் செய்தி வெளியிட முன்வரவில்லை" என்றும், "சிரியாவில் அரசுக்கு எதிரான தரப்பினரைத் தூண்டிவிடும் வகையிலும் அது செயற்பட்டுவருகிறது" என்றும் மேற்படி செய்தியில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கத்தார் நாட்டின் அரசியல் லாபங்களைக் கருத்திற்கொண்டு, லிபியா, சிரியா ஆகிய நாடுகளின் தற்போதைய கள நிலைவரம் தொடர்பில் உண்மைக்குப் புறம்பான பல்வேறு கட்டுக்கதைகளை அல் ஜெஸீரா பரப்பி வருவதாகவும், கத்தார் நாட்டு அதிபர் கலீ.பா அல்தானியின் நேரடித் தலையீட்டின் விளைவாக அதன் செய்தி ஆசிரியர்கள் தமது பணியில் பல்வேறு நிர்ப்பந்தங்களையும் அழுத்தங்களையும் எதிர்கொண்டு வருவதாகவும் மேற்படி செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"சிரிய அரசாங்கத்துக்கு எதிராகவும் பஹ்ரைன் அரசின் சார்பாகவும் செயற்பட்டு, உண்மைக்குப் புறம்பாக நடுநிலை தவறிச் செயற்பட்டுவரும் தமது செய்திச் சேவை நிறுவனத்தின்மீது நம்பிக்கை இழந்த செய்தியாளர்கள் பலர் அடுத்தடுத்து தமது பணியில் இருந்து விலகிச் செல்கின்றனர்" என ஈரானை மையமாகக் கொண்டு இயங்கும் "ப்ரஸ்" செய்திச் சேவை மேலும் தெரிவித்துள்ளது.

கத்தாரில் இருந்து செயற்பட்டு வரும் அரபு மற்றும் ஆங்கிலச் செய்திச் சேவையான அல் ஜெஸீரா, காலத்துக்குக் காலம் இத்தகைய குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. அண்மையில் அதன் பணிப்பாளர் வதா கன்.'பரின் பதவி விலகலின்போது கூட ஒருசில கிசுகிசுக்கள் எழுந்தமை நம் வாசகர்களுக்கு நினைவிருக்கும்.





அல் ஜெஸீரா செய்திச் சேவை ஆரம்பத்தில் அரபியில் தொடங்கப்பட்டு, பின்னர் ஆங்கிலத்திலும் ஆரம்பிக்கப்பட்டது. ஆப்கானிஸ்தானில் பதுங்கி இருந்த ஒஸாமா பின் லேடனின் பேட்டியை நேரடியாக ஒளிப்பதிவுசெய்து முதன் முதலாக வெளியிட்ட போது, உலகின் பரபரப்பான கவன ஈர்ப்பை அது பெற்றுக்கொண்டது. அதுமட்டுமல்ல, அதன் பின் "அல் ஜெஸீரா" தாலிபான்களோடு இணைத்துப் பேசப்பட்டதோடு, பயங்கரவாதிகளோடு தொடர்புடைய சேவை என மேற்குலக ஊடகங்களின் விமர்சனங்களையும் அது எதிர்கொள்ள நேர்ந்தது.

சி.என்.என்., பி.பி.ஸி., ஏ.எ.'ப்.பி. முதலான மேற்கு ஊடகங்கள் நுழையாத பல பிரதேசங்களுக்குள் ஊடுருவி, மாற்றூடகம் ஒன்றுக்கான இடத்தை இட்டு நிரப்பியதில் மிகக் குறுகிய காலத்தில் மேற்குலகினரையும் அல்ஜெஸீரா தன்பால் ஈர்த்துக்கொண்டது. குறிப்பாக, காஸா மீதான ஆக்கிரமிப்பு இஸ்ரேலின் அத்துமீறிய தாக்குதல்கள், காஸாவின் விடுதலைப் போராளிகளுடனான நேரடிச் சந்திப்பு, மஹ்மூத் அப்பாஸுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இருந்த திரைமறைவு ஒப்பந்தங்கள், இஸ்ரேல் மீது லெபனானிய ஹிஸ்புல்லாக்களின் அதிரடித் தாக்குதல், எகிப்தியப் புரட்சி என்பன குறித்த செய்தி ஒளிபரப்பு அல் ஜெஸீராவின் சாதனைகளாகக் கருதப்பட்டன.

இந்நிலையில், தன்னுடைய ஊடகப் பயணத்தில் எத்தனையோ செய்தியாளர்கள் மற்றும் தொழினுட்பவியலாளர்களைப் பலிகொடுத்தும், பல்வேறு விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் எதிர்கொண்டும் தொடர்ச்சியாகச் செயற்பட்டு வரும் அல்ஜெஸீராவின் செய்திச்சேவை குறித்துத் தற்போது எழுந்துள்ள இக்குற்றச்சாட்டு தொடர்பில் பரவலான வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ளன



# உயிர் காக்கும் ஆலோசனை!

மாலை மணி 6:30, வழக்கம் போல் அலுவலகப் பணிகளை முடித்து விட்டு வீட்டிற்கு தனியாக சென்று கொண்டிருக்கிறீர்கள். அலுவலகத்தில் வேலை பளுவின் காரணமாக, மற்றும் இதர சில பிரச்சனைகள் காரணமாக உங்கள் மனம் மிகவும் அழுத்தத்துடன் உள்ளது. நீங்கள் மிகவும் படபடப்பாகவும், சோர்வாகவும் உள்ளீர்கள். திடீரென்று உங்கள் இதயத்தில் அதிக வலி ஏற்படுவதை உணர்கிறீர்கள்.

அந்த வலியானது மேல் கை முதல் தோள்பட்டை வரை பரவுவதை உணருகிறீர்கள், உங்கள் வீட்டில் இருந்து மருத்துவமனை ஒரு ஐந்து மைல் தூரத்தில் இருப்பதாக வைத்துக்கொள்வோம், ஆனால் உங்களால் அந்த ஐந்து மைல் தூரத்தை கடக்க முடியாது என உங்கள் மூளை உங்களுக்கு சொல்கிறது. இந்த நேரத்தில் நம் உயிரை நாமே காக்க என்ன செய்யலாம் ??

துரதிஷ்டவசமாக மாரடைப்பு ஏற்படும் போதெல்லாம் இறப்பவர்கள் அதிகமாக தனியாக இருந்திருப்பவராக உள்ளனர்! உங்கள் இதயம் தாறுமாறாக துடிக்கிறது. நீங்கள் சுயநினைவை இழக்க வெறும் 10 நொடிகள்தான் உள்ளது. இப்போது நீங்கள் செய்ய வேண்டியது தொடர்ச்சியாக மிக ஆக்ரோஷமாக இரும வேண்டும், ஒவ்வொரு முறை



இருமுவதற்கு முன்னரும் மூச்சை இழுத்து விட வேண்டும், இருமல் மிக ஆழமானதாக இருக்க வேண்டும்

இதயம் இயல்பு நிலை திரும்பும் வரையிலோ அல்லது வேறொருவர் உதவிக்கு வரும் வரையிலோ ஒவ்வொரு இரண்டு நொடிக்கும் மூச்சை இழுத்து விட்டு இருமிக்கொண்டே இருக்க வேண்டும். மூச்சை இழுத்து விடுவதினால் நுரையீரலுக்கு ஆக்சிஜன் சீராக செல்ல வழி வகுக்கிறது. இருமுவதால் இதயம் நிற்பதில் இருந்து தொடர்ச்சியாக துடித்துக் கொண்டே இருக்க உதவும், இதனால் ரத்த ஓட்டம் சீரடையும்.

இருமுவதால் ஏற்படும் அதிர்வினால் இதயம் சீராக துடிக்கும். பின்னர் இதயம் சீரடைந்ததும் அருகில் உள்ள மருத்துவமனைக்கு செல்லலாம். இந்த தகவலை குறைந்தது உங்களின் பத்து நண்பர்களுக்காவது பகிருங்கள். தேவை இல்லாத விஷயங்களையும், ஜோக்குகளையும் பகிர்வோர் , உயிரை காக்கும் இது போன்ற விஷயங்களையும் பகிருங்கள் !!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் – ஈரான் மற்றும் குண்டு வெடிப்புகள்:

# பொய்களும் புரட்டுகளும்!



செய்தி ஊடகங்களில் வரும் செய்தியை மட்டும் ஒருவர் அப்படியே நம்ப ஆரம்பித்து விட்டால் உண்மைக்கும் பொய்க்கும் உள்ள வித்தியாசத்தை யாராலும் கண்டு பிடிக்க முடியாது என்று சொல்லப்படுவதுண்டு.

அப்படி சொல்வது உண்மை தான் என்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளது டெல்லியில் நடந்த குண்டு வெடிப்பும் அதை தொடர்ந்து வரும் ஊடக செய்திகளும்.

பொதுவாக எந்த ஒரு சம்பவம் நடந்தாலும் அதை நடத்தியவர்கள் யார் என்பது தெரியவில்லையாயின் அதனால் பயனடைபவர்கள் யார் என்பதைக் கண்டு பிடித்தால், அது உண்மை குற்றவாளிகளை அடையாளம் காட்ட உதவலாம். டெல்லியில் நடந்த குண்டு வெடிப்பில் எல்லா ஊடகங்களும் ஈரானின் பங்களிப்பை நோக்கி மாத்திரமே கை நீட்டுகின்றன. சமீப மாதங்களில் ஈரான் அணுசக்தி விஞ்ஞானிகள் காந்த குண்டு கலாச்சாரத்தை பயன்படுத்தி இஸ்ரேலால் கொல்லப்பட்டது குறித்தோ தன்னுடைய அரசியல் எதிரிகளை எவ்வழிமுறையை பயன்படுத்தியாவது கொல்லும் இஸ்ரேல் குறித்து எவ்வித அலசலோ, கருத்தோ யூகங்களோ ஊடகங்களில் வெளிவராதது ஆச்சரியமே.

இந்தியாவுக்கும் ஈரானுக்கும் இடையே நெடுங்காலமாய் இருந்து வரும் உறவைப் பிரிக்க அமெரிக்கா நீண்ட காலமாய் முயன்று வருகிறது. இந்தியாவில் பெருகி வரும் மசகு எண்ணெய் தேவையைப் பூர்த்தி செய்ய இந்தியா ஈரானை பெரிதும் நம்பியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் மிரட்டலை மீறி இந்தியா ஈரானுடன் தொடர்பு வைத்து கொண்டிருக்கும் நேரத்தில், குறிப்பாக தான் விற்கும் மசகு எண்ணெய்க்கான தொகையை இந்திய ரூபாயில் வாங்க ஈரான் முதல் தடவையாக சம்மதித்திருக்கும் நிலையில் இத்தாக்குதல் நடந்திருப்பது நிச்சயமாக ஈரானுக்குப் பயனளிக்க கூடிய செய்தி அல்ல. எனவே இத்தாக்குதல் காரணமாக இந்தியா ஈரான் உறவு பாதிப்புக்குள்ளானால் யாருக்கு லாபம் எனும் இக்கோணத்திலிருந்தே இத்தாக்குதல் ஆராயப்பட வேண்டும்.

நிச்சயமாக இத்தாக்குதலால் பயனடைய போவது இஸ்ரேல்தான் என்றாலும், இது ஊடகங்களில் விவாதிக்கப்பட்டதாக தெரியவில்லை. அதற்காக இஸ்ரேலியர்களே அவர்களின் காரில் குண்டு வைத்தார்கள் என்று சொல்வதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. ஈரானியர்கள்தான் குண்டு வைத்தார்கள் என்று சொல்வதற்கு ஆதாரம் இல்லாதது போலவே. ஆனால் இப்படி ஒரு சம்பவத்துக்குத் தான் இஸ்ரேல் காத்து கொண்டிருந்தது என்பது, இச்சம்பவத்தை வைத்து இந்தியா ஈரான் உறவை பாதிப்படைய செய்ய இஸ்ரேல் மேற்கொள்ளும் நடவடிக்கைகளிலிருந்து நன்கு விளங்குகிறது.

ஈரானை ஒரு சண்டைக்கார நாடாகவும் தீவிரவாத செயல்களை பிற நாடுகளில் அரங்கேற்றும் போக்கிரி நாடாகவும் சித்தரிக்க இஸ்ரேல் படாத பாடுபடுகிறது. ஆனால் உண்மை என்னவெனில் இஸ்ரேல்தான் ஈரான் மீது தாக்குதல் நடத்த தயாராய் இருக்கிறது என்பது நடுநிலையான மேற்குலக பத்திரிகையாளர்களே ஒத்து கொள்ளகூடிய உண்மை. தாக்குதல் நடந்த ஒரு




சில மணி நேரத்திலேயே இது ஈரானின் கைங்கர்யம் என்று இஸ்ரேல் பிரதமர் நேதான்யாஹு எவ்வித ஆதாரமும் இல்லாமல் சொன்னார். இஸ்ரேல் பிரதமர் பகிரங்கமாக சுமத்திய குற்றச்சாற்றுக்கான எவ்வித ஆதாரமும் இதுவரை தரப்படாததை எந்த ஊடகமும் கேள்வி எழுப்பவில்லை. அதே சமயம், "இத்தாக்குதலுக்கும் எந்த ஒரு நாட்டுக்கும் தொடர்பிருப்பதற்கான ஆதாரம் இதுவரை இல்லை" என இந்தியா அறிவித்துள்ளது.

ஆச்சரியம்! இந்தியாவுக்குள் நடந்த ஒரு தாக்குதலுக்கு எந்த ஒரு வெளிநாட்டு சக்தியாவது காரணம் என்பதற்கான யாதொரு ஆதாரமும் இதுவரை இல்லை என இந்தியா அறிவித்திருக்கும் நிலையில், தாக்குதல் நடந்த செய்தி வெளியான நிமிடத்திலேயே அத்தாக்குதலுக்கு ஈரான்தான் காரணம் என இஸ்ரேல் பிரதமர் அறிவிக்கிறார் எனில், ஈரான்மீது இஸ்ரேல் எந்த அளவுக்கு வஞ்சம் வைத்துள்ளது என்பது தெளிவாவதோடு, இது இந்தியாவுக்கும் ஈரானுக்கும் இடையில் பகைமை மூட்டுவதற்கான இஸ்ரேலின் கைங்கர்யமாக ஏன் இருக்கக்கூடாது என்ற சந்தேகத்தையும் பெரிதாக எழுப்புகிறது. ஆனால், இந்நிமிடம் வரை எந்த ஒரு ஊடகமும் இதனைக் குறித்து கேள்வி எழுப்பத் தயாராகாதது ஆச்சரியத்திலும் ஆச்சரியமே!

திரும்பத் திரும்ப பொய்யை சொன்னால் உண்மையாகி விடும் எனும் கோயபல்ஸ் தத்துவத்தைப் போல், ஈரான் குறித்து பொய்களைத் திரும்பத் திரும்ப உண்மையைப் போல் சொல்கிறது இஸ்ரேல். ஈரான் அணு ஆயுதம் தயாரிக்க போகிறது என்று 2012ல் இஸ்ரேல் சொன்ன இதே கருத்தைத்தான் 1992ல் தற்போதைய பிரதமர் பெஞ்சமின் நேதான்யாஹுவும் 1996ல் அப்போதைய இஸ்ரேல் பிரதமர் ஷிமான் பெரஸும் சொன்னது குறிப்பிடத்தக்கது.

தனக்கு பிடிக்காதவர்களை கொலை செய்வதில் கை தேர்ந்தது மொசாத் என்பது அனைவரும் அறிந்ததே.

கடந்த மாதம் தெஹ்ரானின் மையப் பகுதியிலேயே முஸ்தபா அஹ்மதி ரோஷன் எனும் அணு விஞ்ஞானி கொல்லப்பட்டதன் பின்னால் இஸ்ரேல்தான் உள்ளது என்பது நடுநிலையாளர்கள் ஒத்து கொண்ட உண்மை. கடந்த நான்கு ஆண்டுகளில் இஸ்ரேலால் கொல்லப்பட்ட ஐந்தாவது அணு விஞ்ஞானி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து கருத்து தெரிவித்த கார்டியன் பத்திரிகையின் ஜூலியன் பார்கர், "1972ல் முனிச் ஒலிம்பிக்கில் தங்களைத் தாக்கிய பலஸ்தீன் போராளிகளைக் கொன்றதிலிருந்து 2010 மூத்த ஹமாஸ் தலைவர் மஹ்மூதை துபாய் ஹோட்டலில் கொலை செய்தது வரை கொலை செய்வதில் தொழில்சார் திறன் படைத்த இஸ்ரேல் மாத்திரமே இதை செய்திருக்க முடியும் என்பதைக் கணிப்பதற்குப் பெரிய திறமை ஏதும் தேவையில்லை" என்கிறார்.

ஈரானில் நடக்கும் சிறு நிகழ்வும் மேற்கத்திய ஊடகங்களால் பெரிதுபடுத்துவதைக் கண்டு நாம் ஏமாந்து விடக் கூடாது. ஏனென்றால் பேரழிவு ஆயுதங்கள் இருக்கிறது என்று ஈராக்கை துவம்சம் செய்த அமெரிக்கா இது வரை அதற்கான எச்சத்தைக்கூட ஆதாரமாக காட்ட முடியவில்லை என்பதோடு, ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் ஏதுமில்லை எனவும் சிறிய பிழையான தகவலைத் தந்துவிட்டது எனவும் ரொம்ப சாதாரணமாக அமெரிக்கா ஈராக்கின் கதையை இழுத்து மூடிவிட்டதைக் கவனிக்க வேண்டும். ஆனால் இஸ்ரேல் திரும்பத் திரும்ப ஈரான் அணு குண்டைத் தயாரிக்கும் நிலைக்குச் சென்று விட்டது என்று பல்லவி பாடுவதை விட்ட பாடில்லை.

இஸ்ரேலுக்குத் தற்போதுள்ள நெருக்கடியிலிருந்து தப்பிக்க ஒரு எதிரியை அடையாளம் காட்ட வேண்டும் என்பதற்காகவே ஈரானைப் பயன்படுத்துகிறது. இஸ்ரேலுடன் நெருக்கமாக இருந்த அரபு சர்வாதிகாரிகள் எல்லாம் எகிப்தின் மல்லிகை புரட்சியில் வெளியேற்றப்பட்டு விட்டார்கள். தற்போது வளைகுடா நாடுகளில் இஸ்ரேலுக்கு இருக்கும் ஒரே ஆதரவான பலஸ்தீனின் பதாஹ் அமைப்போ, பலஸ்தீன் போராளி அமைப்பான ஹமாஸுடன் இணங்கி, இரண்டும் ஒற்றுமையாக செயல்படும் தருணத்தை நோக்கி செல்கின்றன.

இஸ்ரேலின் கொள்கைகளுக்கு எதிராகவும் தங்களுக்கு மேம்பட்ட வாழ்க்கை தரம் வேண்டும் என்பதற்காகவும் இஸ்ரேல் அரசுக்கு எதிராக அதன் சொந்த குடிமக்களே ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். இஸ்ரேலில் உள்ள மத்திய தர வர்க்கத்தினர் அகண்ட இஸ்ரேலைவிட நிம்மதியான வாழ்க்கை மற்றும் தங்கள் வாழ்க்கை தரம் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதற்கே முன்னுரிமை கொடுக்கின்றனர், எனவே பிரச்னையை திசை திருப்ப இஸ்ரேலியர்கள் கேட்கும் வசதியைச் செய்து கொடுக்க முடியாத இஸ்ரேல், இஸ்ரேல் மக்கள் கேட்காத போரை அவர்கள் மேல் திணிக்கின்றனர். போர் செய்வதற்கு ஒரு எதிரி தேவை என்பதால் ஈரானை எதிரியாக கட்டமைக்கின்றனர்.

மத்திய கிழக்கின் ஒரே அணு ஆயுதம் வைத்துள்ள நாடான இஸ்ரேல் யதார்த்தத்துக்கு முகம் கொடுக்க முடியாமல் தானே தேவையற்ற ஒரு போரை ஏற்பாடு செய்து அப்போரை தன் குடிமக்கள் மீது திணிக்கிறது. இஸ்ரேலின் நிறுவனர்களில் ஒருவரும் அதன் தேசிய ஹீரோவுமான மோஷே தயானின் மனைவி ருத் தயானின் வார்த்தைகளில் சொல்வதென்றால் "இன்று இஸ்ரேல் ஓர் கனவு தேசமல்ல, மாறாக பிரச்னைகளின் நடுவே தத்தளிக்கும் ஓர் தேசமே இஸ்ரேல்"!

–பெரோஸ்கான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் வலிக்கும் இந்தக் கேள்விக்கு உங்களுக்காவது விடை தெரியுமா?



அல் ஹலீல் நகரைச் சேர்ந்த மூன்று குழந்தைகளின் தாயான மு.'பீக்கா அல் குவாஸ்மி என்ற பெண்மணியை இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படையினர் அண்மையில் கடத்திச் சென்றுள்ளனர்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இப்பெண்மணியின் கணவர் இஹாப் அல் குவாஸ்மி இதுவரை நிரூபிக்கப்படாத பல்வேறு குற்றச்சாட்டுக்களோடு இஸ்ரேலிய ஆக்கிரமிப்புச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலிய அஷ்கலோன் ஆக்கிரமிப்புச் சிறையில் அடைத்துவைக்கப்பட்டுள்ள இத்தம்பதியர், விசாரணை என்ற போர்வையில், இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படையினரால் தினமும் பல்வேறு சித்திரவதைகளை எதிர்கொண்டு வருகின்றனர் எனத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நப்லஸ் நகரின் பலாடா அகதி முகாமில் இருந்து கைதுசெய்யப்பட்ட 21 வயது இளைஞன், மூன்று சிறுவர்கள் உட்பட நான்கு பலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு இராணுவ வழக்குமன்றம் வழக்குப் பதிவுசெய்துள்ளது.

இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை எதிர்த்து பல்வேறு குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ளும் எண்ணத்தில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு அரசாங்கத்துக்கு எதிராகச் சதித்திட்டத்தில் ஈடுபட்டார்கள் என்பது இச்சிறுவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டாகும்.

எந்த ஒரு நியாயமான காரணமும் இன்றி மீண்டும் தன்னைக் கைதுசெய்து தடுப்புக்காவலில் வைத்துள்ள ஆக்கிரமிப்பு அரசாங்கத்தின் அராஜகத்தை எதிர்த்து முப்பதே வயதான ஹனா அல் ஷலபி இஸ்ரேலிய ஆக்கிரமிப்புச் சிறையில் இரு வாரகாலமாக உண்ணாவிரதம் இருந்துவருகிறார்.

இவை எல்லாம், ஒரு பானைச் சோற்றின் சில பதச்சோறுகள் மட்டுமே!

இஸ்ரேலிய எதேச்சதிகாரப் பிடியின்கீழ் சிக்கித் தவிக்கும் பலஸ்தீன் பொதுமக்கள் தம் சொந்த நாட்டிலேயே வீடிழந்து, வாழ்விழந்து அகதிகளாகித் தவிக்கிறார்கள். வருடங்கள் பலவாகியும் நாள்தோறும் ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அட்டூழியங்களுக்கு முகம்கொடுப்பதே அவர்களின் விதியாகி இருக்கிறது.

வயோதிபர்கள், இளம்பெண்கள், தாய்மார்கள், சிறுவர்கள் என்ற எந்தவொரு வேறுபாடும் இன்றி நாள்தோறும் அப்பாவிப் பலஸ்தீனர்கள் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படையினரால் கடத்திச்செல்லப்பட்டு, விசாரணை முகாம்களில் தடுத்துவைக்கப்படுகிறார்கள் அல்லது சிறையில் அடைக்கப்படுகிறார்கள். அவர்கள்மீது போலியான பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அவற்றை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் அளிக்குமாறு சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள் எந்தவித வழக்கு விசாரணையும் இன்றி ஆண்டுக்கணக்கில் அடைத்துவைக்கப்பட்டு ரகசியமாகக் கொன்று புதைக்கப்படுகிறார்கள். இத்தகைய மனித உரிமைமீறல்கள் குறித்து சர்வதேச மட்டத்தில் பெரிதும் பேசப்படுவதில்லை.

இந்த அப்பாவி மக்களின் வாழ்வுரிமை முற்றாக மறுக்கப்பட்டுள்ளது. கல்வி, மருத்துவம் முதலான அடிப்படை வசதிகள்கூட அவர்களுக்கு முறையாக வழங்கப்படுவதில்லை. அங்குள்ள சிறுவர்களின் குழந்தைப்பருவக் கனவுகள் பலவந்தமாகப் பிடுங்கப்பட்டுள்ளன. சுதந்திரமாய்ப் பறந்துதிரிந்து விளையாட வேண்டிய அவர்களின் சிறகுகள் இரக்கமே இல்லாமல் பிய்த்தெறியப்பட்டுள்ளன. பலஸ்தீன் பெண்கள் வயது வேறுபாடுகளுக்கு அப்பால் பல்வேறு சித்திரவதைகளை அனுபவித்து வருகின்றனர். எந்த நேரம் எதுவும் நடக்கலாம் என்ற அச்சுறுத்தலான நிலையில், பல்வேறு மன அழுத்தங்களால் அவர்கள் துவைமந்துகொண்டு இருக்கிறார்கள்.

அறிவியல் வளர்ச்சியின் சிகரத்தில் முழு உலகமும் ஒரு பூகோளக் கிராமமாய் மாறியுள்ள இன்றைய நவீன உலகிலும் வேற்றுக் கிரகவாசிகளைப் போல அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். இஸ்ரேலின் சட்டவிரோத முற்றுகை ஆண்டுகள் பல கடந்தும் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்நிலையில், உலகின் காவல்காரனாகத் தன்னை மார்தட்டிக்கொள்ளும் அமெரிக்கா, குவைட்டை ஈராக் ஆக்கிரமித்தபோது வரிந்துகட்டிக்கொண்டு நாட்டாண்மை செய்யக் களத்தில் குதித்து, நியாயத்தை நிலைநாட்டுவதான(!?) பிரகடனத்துடன், முழு ஈராக்கையும் நிர்மூலமாக்கிய அமெரிக்கா, இஸ்ரேல் பலஸ்தீனை ஆக்கிரமித்து இன்றுவரை எண்ணிலடங்காத அட்டூழியங்களைப் பகிரங்கமாகச் செய்துவருவதைக் கண்டும் கேட்டும் என்னதான் செய்துவிட்டது? கேவலம் ஒரு வல்லரசின் தலைவர் என்பதைக்கூட ஒபாமா மறந்துவிட்டார். ஞாயிறன்று (04.03.2012) வாஷிங்டனில் இடம்பெற்ற (AIPAK) இஸ்ரேலிய ஆதரவு மாநாட்டில் வைத்து "நான் உங்களுக்கு எப்போதும் விசுவாசமான நாய்தான்" என்று வெட்கமே இன்றிப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

உலகம் அறிவியலில் முன்னேறிவிட்டது. இயற்கையை வென்று மனிதனால் எத்தனையோ விதமான சாதனைகள் நிலைநாட்டப்பட்டுவிட்டன. உலக மக்கள் யாவரும் காட்டுமிராண்டிகால நடைமுறைகள் மாறி, பண்பாடும் மனித விழுமியங்களும் மேம்பட்டுள்ளதாய் பெருமிதம் கொள்கிறார்கள்.

ஆனால், அடிப்படை மனித உரிமைகளும் வாழ்வாதாரமும் மறுக்கப்பட்டு, சொந்த மண்ணிலேயே அகதிகளாகி, காட்டுமிராண்டித்தனமான இஸ்ரேலிய அராஜக ஆட்சிக்குள் எதிர்காலத்தைத் தொலைத்துவிட்டு வருடக்கணக்கில் தவிப்பதற்கு நாம் என்ன தவம் மறந்துவிட்டோம் என்று கேட்டுக் கதறுகிறார்கள், பலஸ்தீன் மக்கள்.

உயிர் வலிக்கும் இந்தக் கேள்விக்கு உங்களுக்காவது விடை தெரியுமா?

-ஸரீனா அப்துல் ஹக்-

# ஆளை மயக்கும் அதிசய கீரை !




அகத்தி கீரை: இதன் தாவரவியல் பெயர் (Sesbania grandiflora) என்பதாகும். ரத்த கொதிப்பு கட்டுபடுத்தும். பித்தத்தை போக்கும். இளந்தாய்மார்கள் அகத்தி கீரையை அடிக்கடி சாப்பிட்டால் நிறைய பால் சுரக்கும். கண் எரிச்சல், கண் வலி, கண்ணில் நீர் வடிதல் ஆகிய நோய்களுக்கு அகத்திப்பூவை கண்ணில் வைத்து கட்டிக்கொண்டால் சரியாகும். வைசூரி போன்ற நோய் குணமாக அகத்தி பட்டையை தண்ணீரில் காய்ச்சி வடித்துக் குடிநீராக குடிக்கலாம் அகத்தி கீரையை அடிக்கடி சேர்த்து கொண்டால் எலும்பும், பல்லும் உறுதியாகும். இந்த கீரையின் சாறில் 2 சொட்டு எடுத்து நமது மூக்கில் விட்டால் ஜுரம் போய்விடும். வாய்ப்புண், குடல்புண், தொண்டைப்புண் ஆகிறவற்றை இது நீக்கும்.

பொன்னாங்கண்ணி கீரை: இக்கீரையின் சாறு எடுத்து நல்லெண்ணெயுடன் சேர்ந்து தைலம் காய்ச்சி தலைக்குத் தேய்த்துக் குளித்து வர கண் எரிச்சல், உடல் உஷ்ணம் போன்றவைகள் நீங்கி உடல் குளிர்ச்சிப் பெறும்.

பொன்னாங்கண்ணி கீரையுடன் பாசிப்பருப்பு, சின்ன வெங்காயம், சீரகம், பூண்டு மிளகுத்தூள் சேர்த்து சமைத்து சாப்பிட்டால் அசுத்த இரத்தம் சுத்தமாகும். உடலுக்கு புத்துணர்ச்சியைத் தரும்.

வெயிலில் வேலை செய்பவர்களுக்கும், கணினியில் அதிக நேரம் வேலை செய்பவர்களுக்கும் கண்களில் எரிச்சல் மற்றும் கண் சிவப்பாக காட்சிதரும்.

பொன்னாங்கண்ணிக் கீரையை பொரியல் செய்து சாப்பிட்டு வந்தால் கண் பார்வைக் கோளாறுகள் நீங்கும்.

மூல நோய்க்கு அறுவை சிகிச்சை தேவையில்லை.பொன்னாங்கண்ணி கீரையுடன் பூண்டு, வெங்காயம் சேர்த்து வதக்கி அதனுடன் சீரகம் சிறிது சேர்த்து சாப்பிட்டு வந்தால் மூலநோய் படிப்படியாக குணமாகும். அப்போது புளி, காரத்தை தவிர்ப்பது நல்லது.

கூந்தல் வளர தினமும் பொன்னாங்கண்ணி தைலம்

தயாரிக்கும் முறை: பொன்னாங்கண்ணி இலையை நிழலில் உலர்த்தி காயவைத்தது - 20 கிராம், அருகம்புல் காய்ந்தது 10 கிராம், செம்பருத்தி பூ காய்ந்தது 10 கிராம் எடுத்து 1/2 லிட்டர் தேங்காய் எண்ணெயில் நன்கு காய்ச்சி பாட்டிலில் அடைத்து தினமும் உபயோகிக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









தற்பொழுது இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கம் 2014ல் தன் பதவி காலத்தை பூர்த்தி செய்யும் போது அடுத்த பிரதமராக யார் வருவர்? 1 பில்லியன் மக்களின் பிரதிநிதியாக வரும் வாய்ப்பு யாருக்கு இருக்கும்?

பொதுவாக ஒருவர் பிரதமர் ஆக வேண்டும் என்றால் அதற்காக பல ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிட்டு அந்த இலக்கை நோக்கி உழைத்திருப்பார் என்று நாம் நினைக்கலாம். ஆனால் இந்தியாவின் பிரதமர்களின் வரலாற்றை சற்று அலசி பார்த்தால் பிரதமராவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் அவர்கள் திட்டமிடுவது ஒரு புறம் இருக்க, அவர்கள்

பணியாற்றிய ராஜீவ் காந்தி பிரதமராக குறைவு என்பதை ஒப்பு கொண்டே ஆக மொரார்ஜி தேசாய்

1989ல் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கு ராஜீவை எதிர்த்து போட்டியிட்டு தோல்வியடைந்த நரசிம்ம ராவ் ராஜீவின் ஆலோசகராக ஒட்டி கொண்டார். அதுவே ராஜீவ் கொலையால் திடீரென்று பிரதமர் பதவி கிடைக்க காரணமாக இருந்தது என்று உறுதியாக சொல்லலாம்.

ராஜீவ் காந்தி

இந்திரா காந்தி கொலையுண்ட சம்பவம் நடந்திருக்காவிட்டால் பைலட்டாக வருவதற்கான வாய்ப்பு வேண்டும்.

# இந்தியாவின் அடுத்த பிரதமர் யார்? - ஸ்பெஷல் ரிப்போர்ட்

அரசியலில் தண்ணியில்லா காட்டில் பணி மாற்றம் வாங்கியவர்களை போல் இருந்திருக்கிறார்கள் என்பது தான் அதிசயமான உண்மை.

மன்மோகன் சிங்

மன்மோகன் சிங் 2004ல் பிரதமரானார். ஆனால் 2002ல் அவர் எங்கு இருந்தார் என்பது யாருக்கும் தெரியாது. 1999 நாடாளுமன்ற தேர்தலில் மன்மோகன் தோற்றதோடு பாஜக கூட்டணி சிறப்பாக செயல்பட்டு கொண்டிருந்தது. ஒரு வேளை காங்கிரஸ் வெற்றி பெறும் நிலை என்றாலும் சோனியா தான் பிரதமராக அதிக வாய்ப்பிருந்தது. அதனால் தான் மன்மோகன் பிரதமராக ஆக்கப்பட்ட போது, சென்செக்ஸ் படுபாதாளத்துக்கு சென்றதோடு 3 முதல் 6 மாதங்களில் ஆட்சி கலையும் என்று கூறப்பட்டது. ஆனால் எவ்வித உணர்வுகளையும் வெளிக்காட்டாமல் பெவிக்கால் ஒட்டியதை போல் 8 வருடங்களை ஓட்டி விட்டார் சிங்ஜி.

குஜ்ரால்

1997ல் குஜ்ரால் பிரதமரானது எல்லோருக்கும் தெரியும். ஆனால் எத்துணை பேருக்கு 1995ல் குஜ்ராலை தெரியும் என்பதே கேள்விக்குறி தான். பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட போது நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத குஜ்ரால் நிலையில்லாமல் இருந்தாலும் 2 வருடங்களை ஓட்டினார்.

தேவ கவுடா

1996ல் பிரதமராக தேவ கவுடாவை நியமிக்க நடந்த ஆலோசனை கூட்டத்தில் கூட தேவ கவுடா பங்கேற்கவில்லை. கர்நாடக முதல்வராக இருந்த தேவகவுடா பிரதமராக வருவார் என்பதை அவரே எதிர்பார்த்திருக்க மாட்டார்.

வாஜ்பாய்

1990களின் ஆரம்பத்தில் பிஜேபியின் புதிய முகமாக தோற்றமளித்த அத்வானியே பிரதமர் பதவிக்கான வேட்பாளராக ஆக இருந்தார். ஹவாலா ஊழலில் தன் மேல் உள்ள குற்றச்சாட்டு தவறு என நிரூபிக்கும் வரை தேர்தலில் போட்டியிட மாட்டேன் என்று அறிவித்தார். அச்சமயம் பார்த்து பிஜேபியும் தேர்தலில் வெற்றி பெற அரசியலில் இருந்தே ஓய்வு பெற்று விட்டார் என்று நினைக்கப்பட்ட வாஜ்பாய் பிரதமராகி விட்டார்.

நரசிம்ம ராவ்

1972ல் அசுர பெரும்பான்மையோடு வெற்றி பெற்ற இந்திரா காந்தி 1975ல் எமர்ஜென்ஸியை கொண்டு வந்த போது அது நீண்ட காலத்துக்கு நீடிக்கும் என்று நினைக்கப்பட்ட போது எங்கே பிரதமர் கனவு எல்லாம். ஆனால் மொரார்ஜிக்கும் அவ்வாய்ப்பு 1977ல் கிடைத்தது.

விதிவிலக்குகள்

இந்தியா சுதந்திரமடைந்த போது சர்தார் படேல், லால் பகதூர் சாஸ்திரி போன்றோரிடமிருந்து போட்டி இருந்த போதிலும் ஜவஹர்லால் நேரு பிரதமராவர் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்று தான். லால் பகதூர் சாஸ்திரி கூட நேருவின் மரணத்தால் திடீரென்று பிரதமரானவர்தான். 1960களின் ஆரம்பத்தில் அவ்வளவாக அறியப்படாத இந்திரா, சரண் சிங், சந்திரசேகர் போன்றோரும் பிரதமருக்கான வேட்பாளர்களாக பிரபலமாக அறியப்படாதவர்கள்தாம்.

அடுத்த பிரதமர் யார் ?

இது வரை வந்த பிரதமர்களின் வரலாற்றை பார்த்தோம் என்றால் அடுத்த பிரதமர் யார் என்பதை கணிப்பது இன்னும் கடினமாகிறது.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் மன்மோகன் சிங்குக்கே ஹாட்ரிக் சான்ஸ் கிடைக்கலாம். இல்லையெனில் இளவரசர் ராகுல் காந்திக்கு முடி சூட்டப்படலாம். நம்பிக்கையான ஆள் எனும் பட்சத்தில் பிரணாப் முகர்ஜியோ பெண் எனும் அடிப்படையில் மீரா குமாருக்கோ 2ஜி ஊழல் குற்றச்சாட்டிலிருந்து மீளும் பட்சத்தில் நம்ம பச்சை தமிழன் சிதம்பரத்துக்கோ பிரதமர் ஆகும் வாய்ப்பு கிடைக்கலாம்.

பிஜேபி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியில் அமர்ந்தால் நரேந்திர மோடிக்கு பிரதமர் ஆக வாய்ப்பு அதிகம். அத்வானியின் வாய்ப்பை ஓரேடியாக நிராகரிக்க முடியாது. சுஷ்மா ஸ்வராஜ், நிதின் கட்காரி, அருண் ஜெட்லிக்கு கூட கிடைக்கலாம். கூட்டணி கட்சிகளின் ஆதரவில் பிஜேபி வரும் பட்சத்தில் நிதிஷ் குமாருக்கோ அல்லது காங்கிரஸ் ஆதரவில் பிற கட்சிகளின் ஆட்சி வரும் பட்சத்தில் முலாயம் சிங்குக்கோ வாய்ப்பு கிடைக்க சாத்தியமுண்டு.

இது எதுவுமே இல்லாமல் நாம் இது வரை பார்த்த மாதிரி 2012ல் யாரென்று அறியப்படாத யாரோ ஒருவர் கூட பிரதமர் ஆகலாம் 2014ல். ஏன் அவசரம்? பொறுத்து தான் பார்ப்போமே!

# பலமான காற்றின்மை, உயர் ஈரப்பதன் என்பனவே கடும் வெப்பநிலைக்கு காரணம்



நாட்டில் கடும் வெப்பமான வானிலை காணப்படுவதற்கு பலமான காற்று இல்லாதிருப்பதுவும் வளிமண்டலத்தில் உயர் ஈரப்பதன் காணப்படுவதுமே காரணம் என்றும் ஆனால், வருடத்தின் இப்பகுதியில் இது வழமையான தோற்றப்பாடுதான் எனவும் வளிமண்டலவியல் பணிப்பாளர் எச்.கே.காரியவசம் தெரிவித்துள்ளார்.

"காற்று மெதுவாகவே வீசுகிறது. பலமான காற்று இல்லை. கீழ்மட்டத்தில் வளிமண்டலம் ஈரமாக உள்ளது" என அவர் கூறினார். உடலிலிருந்து நீர் ஆவியாக வெளியேறும்போது உடல் குளிர்கின்றது. ஆனால் வளிமண்டலத்தில் ஈரப்பதன் அதிகமாக இருக்கும்போது இது நடைபெற்றது. இதுவே நாம் அதிக வெப்பத்தை உணர்வதற்கு காரணமாகும். இருப்பினும் வெப்பநிலையில் அதிக அதிகரிப்பு காணப்படவில்லை. 30 பாகை சி – 32 பாகை சிக்கு இடையில் வழமை போலவே உள்ளது என அவர் கூறினார்.

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வித்தியாசமான வானிலை ஏற்படுகின்றது. நுவரெலியாவில் அதிகாலை வேளையில் கடும் குளிரான வானிலை காணப்படுகின்றது. வானத்தில் அதிக முகில் இல்லாதிருப்பதே இதற்கு காரணமாகும். பூமியிலிருந்து கதிர்க்கப்படும் வெப்பத்தை பூமிக்கு திருப்பி அனுப்பும் முகில்கள் இல்லாதபோது பூமி குளிர்வடையும். இதுவே நுவரெலியாவில் நடக்கின்றது.

பருவக்காற்றுக்கள் வீசத் தொடங்கும்வரை தற்போதைய வானிலைக்கோலம் தொடரும். ஏப்ரல் முதல் வாரத்தில் பருவக் காற்றினை, மழை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையோடு நல்லுறவு



"காடுகள் அழகாக இருக்கின்றன; அவை இருண்டிருக்கின்றன; அடர்ந்திருக்கின்றன ஆனால் நான் சில வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. உறங்குவதற்கு முன் நெடுந்தூரம் செல்லவேண்டியிருக்கிறது". இவை, இராபர்ட் ஃப்ராஸ்டின் என்ற ஆங்கிலக் கவிஞர் எழுதிய வரிகள்.

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு இறந்த போது அவரது தலையணைக்கு அடியில் ஒரு துண்டுத் தாள் இருந்ததாம். அதில் இந்தக் கவிதை வரிகளை அவர் கைப்பட எழுதி வைத்திருந்தாராம். உண்மைதான். மனிதனுக்கு எப்போதுமே காடுகள் மீது ஓர் ஈர்ப்பு உண்டு. காடுகளின் அடர்த்தி, அவற்றின் அழகு, இருட்சி, அமைதி, ஆங்காங்கே கேட்கும் தெளிந்த நீரோடைகளின் சப்தம், பறவைகளின் கீச்சு ஒலி, விலங்குகளின் பிளிறல் என காடுகள் பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம். எப்போதும் இரைச்சலுக்கு மத்தியில் வாழும் மனிதன் அமைதி தேடி காடுகளுக்குச் செல்கிறான். காடுகளில் தனிமையில் பல யோகிகள் வாழ்ந்திருக்கிறார்கள்.

இந்தக் காடுகள்தான் ஆதிகால மனிதனுக்குத் தாய் மடியாகவும், மார்பகமாகவும் இருந்துள்ளன. இக்காலத்திலும், உலக வங்கியின் கணிப்பின்படி 160 கோடிக்கு மேற்பட்ட மக்கள் தங்களது வாழ்க்கைக்குக் காடுகளைச் சார்ந்துள்ளனர். இவர்களில் சுமார் முப்பது கோடிப் பேர் காடுகளிலே வாழ்கின்றனர். காட்டு உற்பத்தித் தொழில், பொருளாதார முன்னேற்றத்துக்கும் வேலை வாய்ப்புக்களுக்குமான முக்கிய ஆதாரங்களில் ஒன்றாக உள்ளது. உலகின் காட்டு உற்பத்திகளின் வணிகத்தின் மொத்தப் பெறுமதி 32 ஆயிரத்து 700 கோடி டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்தப் பொருளாதார ஆதாயத்துக்காகக் காடுகள் அழிக்கப்படுவதால் ஒவ்வோர் ஆண்டும் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் சதுர கிலோமீட்டர் பரப்பளவு காடுகள் அழிந்து போகின்றன. காடுகளும் காட்டு மண்ணும் நூறாயிரம் கோடிக்கு மேற்பட்ட டன் கார்பனைச் சேமித்து வைக்கின்றன. இந்த அளவில் இரண்டு மடங்கு வெளிமண்டலத்தில் உள்ளது என்று ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் கூறுகிறது.

பசுங்குடில் வாயு வெளியேற்றத்தில் 20 விழுக்காட்டுக்கு காடுகள் அழிக்கப்படுவதே காரணம், இப்புவி மேலும் மேலும் வெப்பமடைவதற்கு இது உதவுகின்றது. மேலும், உலகில் வாழும் உயிரினங்களில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்குக்கும் மேற்பட்டவைகள் காடுகளில் வாழ்கின்றன. வெப்பமண்டல மழைக்காடுகள் அழிக்கப்பட்டு வருவதால் நாளொன்றுக்கு சுமார் நூறு இனங்கள் வீதம் அழிந்து வருகின்றன என்று உலக வங்கி கூறுகிறது. உலகம் முழுவதிலும் நூறு கோடிக்கு மேற்பட்ட ஹெக்டேர் பரப்பளவு கொண்ட அழிந்துபோன அல்லது தரம் குறைந்துபோன காடுகளை மீள்விக்க முடியும் என்று IUCN என்ற பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியமும், காட்டு நிலஅமைப்பு கூட்டாண்மையும் கூறுகின்றன.

இந்தப் புள்ளி விபரங்களைப் பன்னாட்டு அமைப்புகள் அடிக்கடி வெளியிட்டு வரும் நோக்கம் எல்லாருக்கும் தெரிந்ததுதான். கடந்த நவம்பரில் எத்தனை நாடுகள் கனமழையினால் கடுமையாய்ப் பாதிக்கப்பட்டன! இந்தச் சேதங்களைப் பயன்படுத்திக் கொலைகளையும் கொள்ளைகளையும் சிலர் நடத்தினர். காடுகள் கட்டுப்பாடின்றி அழிக்கப்பட்டால், புதிதாக மரங்கள் நடப்படவில்லையெனில் வருங்காலத் தலைமுறை பெரும் பின்னடைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இதனைக் கவனத்தில் கொண்டு ஐக்கிய நாடுகள் நிறுவனம் 2011ம் ஆண்டை, காடுகள் ஆண்டாக, வன ஆண்டாக அறிவித்துப் பலவிதமான செயல்திட்டங்களையும் மேற்கொண்டது. மரம் நடுதலை 2006ம் ஆண்டிலே துவக்கிய ஐ.நா, உலகம் முழுவதும் 300 கோடி மரங்களை நடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. மொத்தம் 700 கோடி மரங்களை நடவும் முடிவு செய்துள்ளது. இந்த மரங்கள் நடும் திட்டத்தில் தற்போது எத்தியோப்பியா 72.5 கோடி மரங்களை நட்டு முதலிடத்திலும்; துருக்கி 70 கோடி மரங்களை நட்டு 2வது இடத்திலும் உள்ளன. இப்பட்டியலில் மெக்சிகோ (47,24,04,266 மரங்கள்) 3வது இடத்திலும், கென்யா (13,98,93,668 மரங்கள்) 4வது இடத்திலும், கியூபா 5வது இடத்திலும் (13,74,76,771) உள்ளன.



சீவக சிந்தாமணியும், ஒருவர் எத்தனை மரங்களை நட வேண்டுமென்று சொல்கிறது. "ஓர் அரசு ஆலும் வேம்பும், ஒரு பத்துப் புளியும், மூன்று சீருடன் விளையும் வில்வமும், மூன்றுடன் சிறந்த நெல்லியும், பேர் பெறும் ஐந்து தென்னை, பெருகு, ஐந்து மா. இவற்றை யார் யார் பயிர் செய்கிறாரோ அவர்க்கில்லை நரகம் தானே" என்று சீவக சிந்தாமணி சொல்கிறது.

"காடுகளைக் கொண்டாடு, வாழ்வைக் கொண்டாடு" என்னும் சுலோகத்துடன் அமெரிக்க ஐக்கிய நாட்டில் இந்த அனைத்துலக வன ஆண்டு கடைபிடிக்கப்பட்டு வருகிறது. நியூசிலாந்து நாட்டு வெலிங்டனில் நாடாளுமன்ற கட்டிடத்தில் இவ்வாண்டைத் தொடங்கி வைத்த அந்நாட்டு வனத்துறை அமைச்சர் David Carter, "இயற்கையை அடிப்படையாகக் கொண்ட நாட்டுப் பொருளாதாரத்திற்கு காடுகள் ஒருங்கிணைந்த அங்கம் வகிக்கின்றன, காடுகள் சுற்றுச்சூழல் நன்மைகளைத் தருகின்றன, அவை கலாச்சார ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை" என்று கூறினார். ரொமானிய நாட்டுக் கழகம், இந்த வன ஆண்டு குறித்து தேசிய அளவில் ஒரு கலந்துரையாடலையே நடத்தியுள்ளது. தமிழகத்தின் கோவையில், பசுமையைக்கொண்டு வரும் "பசும்புலரி" என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு வாரத்துக்கு 2,011 மரங்கள் வீதம் 52 வாரங்களில் 1,04,572 மரக்கன்றுகளை நட்டு, அவற்றை நூறு சதவீதம் வளர்ப்பதே நோக்கமாகும். இத்திட்டத்தில், ஆயிரம் மரங்களை வளர்க்க, "கிரீன் கார்டியன்", நூறு மரக்கன்றுகளை வளர்க்க, "கிரீன் வார்டன்", பத்து மரக்கன்றுகளை வளர்க்க "கிரீன் ஹேரண்ட்" என்று நான்கு அடுக்குப் பசுமை இணைப்பை ஏற்படுத்தியுள்ளது. பள்ளிகளில் இதனை ஊக்குவிக்கும் முறை பற்றி இந்த அமைப்பைச் சேர்ந்தவர் விளக்கியிருக்கிறார். இந்தத் திட்டத்தின் துவக்க விழாவில் பேசிய இந்திய முன்னாள் அரசுத் தலைவர் அப்துல் கலாம், "ஒரு லிட்டர் டீசல், 2.7 கிலோ கார்பன் டை ஆக்சைடை உற்பத்தி செய்கிறது. நானும், எனது நண்பர்களும் கடந்த 2 நாள் பயணத்தில், 162 கிலோ கார்பனை உற்பத்தி செய்துள்ளோம், ஆண்டுதோறும் அண்டவெளியில் 3,600 கோடி டன் கார்பன் உருவாகி, உலக வானிலை நிலவரம் மாறிக் கொண்டிருக்கிறது. ஒரு மரம், ஆண்டுக்கு இருபது கிலோ கார்பனை உட்கொண்டு, 14 கிலோ ஒட்சிசனை உற்பத்தி செய்கிறது. நாட்டிலுள்ள 100 கோடி மக்களும், ஆளுக்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும். மொத்தத்தில் நம்மால் நூறு கோடி மரங்களை வளர்க்க முடியும் அப்படி வளர்த்தால், நாட்டின் தட்ப வெப்ப நிலையே மாறி, உலகிற்கே வழிகாட்டியாக இந்தியா மாறும்" என்று உரையாற்றினார்.

இயற்கை வளங்கள் நீடித்து நிலைக்க ஒரு நாட்டின் மொத்த நிலபரப்பில் 33.3% அதாவது மூன்றில் ஒரு பங்கு காடுகளாக இருக்க வேண்டும் என்று அறிவியலாளர் சொல்கிறார்கள். ஆப்ரிக்காவில் மரங்கள் வளர்ப்பு, நல்ல விளைச்சலையும், அறுவடையையும் உணவு பாதுகாப்பையும் தருவதாக ஓர் ஆய்வறிக்கை கூறுகிறது. மேற்கு ஆப்ரிக்க நாடான புர்க்கினா ஃபாசோவில், கிராம மக்களின் உயிர்



# ஒரு அற்புத நாகரீகத்தின் சொந்தக்காரர்கள்






புராதனவரலாறுகளில் மறக்கடிக்கப்பட்ட அல்லது அதில் புதைந்து போன ஒரு நாகரீகம் தான் "மாயா நாகரீகம்" காட்டுவாசிகளும் அல்லாத, செவ்விந்தியர்களும் அல்லாத ஒரு கலவை நிலை மனிதர்கள் இவர்கள். துல்லியமான கணிதமுறை, பிரமிக்கவைக்கும் கட்டிடக்கலை, வியக்கவைக்கும் வானிலை கணிப்புக்கள், இதையெல்லாம் விட

# தற்போது இஸ்லாத்தை நோக்கி!



வருங்காலத்தை கணித்து கூறும் அவர்களது நாட்காட்டி என பிரமிக்கவைக்கிறார்கள் மாயர்கள். ஆபிரிக்கர்களையும் விஞ்சிய சூனியகலையின் சொந்தக்காரர்கள் இவர்கள் என்றால் அது மிகையல்ல.

இன்று அந்த இனம் காலவழக்கில் அழிவிற்கும் சிதைவிற்கும் உட்பட்டு சுமார் 600000 மக்கள் மட்டுமே பிரேசிலின் அமேசன் காட்டோரங்களிலும், குவாத்தமாலாவின் எல்லைகளிலும் வாழ்கிறார்கள். அண்மையில் ஹொண்டுராசிலும் மத்திய அமெரிக்காவிலும் உள்ள மாயா இனத்தவரை லத்தின் அமெரிக்க தேசங்கள் புரட்சியாளர்கள், ஆபத்தானவர்கள் என அறிவித்துள்ளன. மாயா இனத்தவரின் இன அழிப்பில் கிறிஸ்தவ மடாலயங்கள் பல இரகசிய திட்டங்களை மேற்கொண்டு காலத்திற்கு காலம் அவர்களை அழித்தது. மாயர்களின் அழிவினிலேயே நவீன ஐரோப்பா கட்டியெழுப்பப்பட்டது என்று கூறப்படுவதுண்டு. கிறிஸ்தவ மற்றும் சிலை வணக்கங்களில் வெறுப்புற்ற மாயா இனத்தவர்கள் பலர் நாஸ்திக வாழ்வியலை மேற்கொண்டு வருகின்றனர். அண்மைக்காலங்களில் சுமார் 500 இற்கும் மேற்பட்ட மாயா இனத்தவர் இஸ்லாத்தைத் தழுவியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

909ம் ஆண்டு, 80%க்கு மேற்பட்ட மாயா இனத்தவர்கள் உலகின் பார்வையிலிருந்து காணாமற் போகிறார்கள், அவர்கள் எங்கே போனார்கள் என்ற காரணத்தை யாருக்கும் சொல்லிக் கொள்ளவில்லை. நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த கோவிலின் வேலைபாடுகள் நிறைவடையவில்லை. சிலைகள் பாதியாய் உருவம் வாங்கி நிற்கின்றன. அனைத்தும் பாழடைந்து புதைந்து கொண்டிருக்கிறது. வேண்டுதல்களும், மாய மந்திர வேலைகளும் அமைதி பெற்றுவிட்டது. அன்று முதல், இவ்வினத்தின் மூதாதைகளின் புத்திசாலித்தனமும், கற்பித்தலும் காற்றோடு கலந்து போகிறது. மிச்சம் மீதி இருந்த மாயா இனத்தவர்களுக்கு எழுத்தின் மீதும் படிப்பறிவின் மீதும் கண் பார்வையற்று போகிறது. அவர்களுக்கு வாழ்க்கை நெறியும் மறந்து போகிறது. அவ்வினம் மிருகத்தன்மையை அடைகிறது. மேற்கூறியவை



1992 - ஆம் ஆண்டு மாயன முஸ்லிம்கள் ஹஜ் செய்தபோது..




மெக்ஸிகோ நாட்டின் காட்டுப் பகுதியில் மர்மமாய் தோன்றி மறைந்த மாயா நாகரிக ஆராய்ச்சியாளர்களின் அறிக்கை.

1000 வருடங்களுக்கும் மேலாக இவ்வளவு ஆச்சரியமும், அற்புதமும் நிறைந்த நாகரிகம் புதைந்து கிடந்ததை யாரும் கண்டறியவில்லை. 1839ம் ஆண்டு, அமெரிக்காவை சேர்ந்த எழுத்தாளரான John Lloyd Stephens உதவியாளர் ஒருவரின் துணையோடு இங்கே செல்கிறார். பாழடைந்த பழமைமிக்க நகர பகுதி அங்கே உதித்து மறைந்ததை அவர் கண்டுபிடிக்கிறார். பல்லாயிரம் ஆண்டுகாலமாக செடிகொடிகள் சூழ புதைந்த கட்டிடங்கள் கலைதிறன் வேலைப்பாடுகளோடு உறுதியோடு இருக்க காண்கிறார். அடுத்ததாக அவர் ஒரு விசித்திரத்தை காண்கிறார். அவ்விடத்தில் மனிதர்கள் யாரையும் காண முடியவில்லை. நீண்ட காலமாக அவ்விடம் நாதியற்று கிடந்திருக்கிறது. அன்று முதல் அவ்விடம் ஆராய்ச்சிக்குள்ளாகிறது.

16ம் நூற்றாண்டின் போது தென் அமெரிக்க பகுதியை ஆட்சி செய்த ஸ்பெயின் நாட்டினரின் கடுமையான தாக்குதலே இந்நாகரிகத்தின் அழிவுக்கு மூலகாரணம் எனக் கூறப்படுகின்றது. அவர்களின் கண்டுபிடிப்பும் எழுதியநூல்களும் அச்சமயம் அழிக்கப்பட்டது.



இச்செயல் உலகிற்கு மாயா இனத்தவரை பற்றிய பல உண்மைகளை உணர்த்த முடியாமலும் செய்துவிட்டது. தற்சமயம் நமக்குக் கிடைத்திருப்பது அந்நாகரித்தை பற்றிய சிறு துளி கண்டுபிடிப்புகள் மட்டுமே. இவையாவும் அவ்விடத்தில் கிடைக்கப்பட்ட சில துண்டு எழுத்துகளில் வடிவில் கிடைத்தவையாகும்.

அவர்களது நகரங்களில் பெரும் கற்களை கொண்ட கட்டிட வேலைபாடுகள் உள்ளன, பெரிய அளவிலான நகர வடிவமைப்பு, எழுத்துக்கள், மற்றும் அறிவு நுணுக்கங்கள் மாயா இனத்தவரின் போற்றதக்க கலைத்திறன்களாகும். இவை தற்போதைய தொழில் நுட்பத்தைவிடவும் மேலானவையாகவே கருதப்படுகிறது. எகிப்திய பிரமிடுகளை அடுத்து இந்நகரில் காணப்படும் பிரமிடுகளே பிரசித்தி பெற்று விளங்குகிறது. இப்பிரமிடுகளை சுற்றிலும் 4 பெரிய படிகட்டுகளும் அவற்றுள் அடங்கிய 365 படிக்கட்டுகளும் காணப்படுகிறது. இவையாவும் ஒரு ஆண்டிற்கான 4 காலங்களையும் 365 நாட்களையும் குறிப்பதாக கூறப்படுகிறது.

இந்நிலை மாயா இனத்தவரின் வான் ஆராய்ச்சி நுட்பத்தை குறிக்கிறது. இதை தவிர்த்து கட்டிடங்களின் உட்புறமும் வெளிப்புறமும் பல வகையான எண்களால், வான் மாற்றங்களை பற்றிய விசயங்கள் செதுக்கப்பட்டிருக்கிறது. மாயாக்களால் எப்படி அசாத்தியமிக்க கட்டிடங்களை எழுப்ப முடிந்தது? அதுவும் அடர்ந்த காட்டிற்குள்? இவர்களது கட்டிடங்கள் 'டன்' கணக்கிலான கற்களை கொண்டு அந்த மர்ம நகரத்தினில் அமைக்கப்பட்டுள்ளது. மாயக்கள் இப்பெரிய கற்களை அடர்ந்த காட்டிற்குள் கொண்டு வந்ததும், அவற்றை சரிவர அடுக்கி கட்டிடங்களையும் பிரமிடுகளையும் அமைத்துள்ளதும் ஆச்சரியமிக்கவையாகும். மாயாக்கள் எவ்விதமான தொழில்நுட்பத்தை கையாண்டு இத்தகைய நகரத்தை அமைத்தார்கள் என்பதும் கேள்விக்குறியே.



ஆராய்ச்சியாளர்கள் மாயர்களின் நாகரிகம் கி.மு 2000 ஆண்டில் தொடங்கி சிறுகச் சிறுக வளர்ச்சியடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்கள். கி.மு 2000 முதல் 250 வரை வளர்ச்சி காலமாகவும், 250 தொடங்கி 900 வரை மாயாக்களின் பொற்காலமாகவும் கருதப்படுகிறது. 7 மற்றும் 8ம் நூற்றாண்டுகள் மாயர்களின் உச்சகட்ட பொற்காலம் எனவும் கூறுகிறார்கள்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மாயர்களின் மறைவிற்கு இயற்கை சீற்றங்களும் ஒரு காரணம் என கூறப்படுகின்றது. மாயர்களின் கலை திறன் மிகவும் நுட்பமானது. சிற்ப கலையும் வரையும் திறனும் இவர்கள் விட்டுச் சென்ற அற்புத பொக்கிஷங்களின் வடிவில் இன்றளவும் நம்மால் காண முடிகிறது. கட்டிட கலையும் இவற்றுள் அடங்கும். மாயர்களால் Tikal, Palenque, Copan, Kalakmul, Dos Pilas, Uaxactun, Altun Ha போன்ற நகரங்கள் மிகவும் திறமையாக உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றுள் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குவது பிரமிடும் அரண்மனையும் ஆகும். மாயா நகர பகுதியில் காணப்படும் stelae எனப்படும் கல் வகையில் இவர்களின் ஆட்சிமுறை, போர்களில் பெற்ற வெற்றி மற்றும் பல முக்கிய தகவல்கள் heiroglyphik எழுத்துவடிவில் செதுக்கப்பட்டுள்ளது. மாயர்கள் தூர தேச வியாபாரத்திலும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதும் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கபட்ட உண்மைகள்.



ஆராய்ச்சியாளர்களின் கவனத்தை ஈர்த்த இன்னொரு விசயம் ஒவ்வொரு மாயா நகர பகுதிகளிலும் காணப்படும் மிகப் பெரிய விளையாட்டு மைதானமாகும். 20ம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை புரியாத புதிராகவே இருந்த மாயர்களின் எழுத்து வடிவம் 1960–1970ல் அர்த்தங்கள் கண்டுபிடிக்கப்பட்டு படிக்கப்பட்டன. இதன் வழி 'ஸ்பெயின்' நாட்டினரின் படையெடுப்பும், பல்லாயிர கணக்கான புத்தகங்கள் எரிக்கப்பட்டதும் வருத்தத்துடன் தெரிந்து கொள்ள முடிந்தது. அவர்களின் 4 புனித நூல்களில் மூன்றும் நான்காம் நூலின் சில பக்கங்கள் மட்டுமே கிடைத்துள்ளது.

இந்திய நாகரிகத்தை அடுத்து மாயர்களும் '0' பூஜியத்தை கணக்கு வழக்குகளில் பயன்படுத்தி இருக்கிறார்கள். இவர்கள் 0 முதல் 20 வரையிலான எண் வகைகளை பயன்படுத்தியிருக்கிறார்கள். கல்வெட்டுகளில் இவர்கள் லட்சம் வரையில் கணக்கு வழக்குகளை எழுதி பார்த்திருக்கிறார்கள். அவை பெரும்பாலும் வான் ஆராய்ச்சிக்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கிரகங்களின் அசைவுகளும், வான் நிகழ்வுகளும் துள்ளியமாக கணிக்கப்பட்டுள்ளன.



மாயர்கள் என்ற இந்த பழங்குடியினத்தவரை சில ஆண்டுகளுக்கு முன்பு வெளியான ஹாலிவுட் திரைப்படமான "2012" மிகவும் பிரபலமாக்கியது. மாயர்களின் காலண்டர் Dec, 2012டன் முடிவதாகவும், அதுவே உலகின் அழிவுக்காலம் என்பது போலவுமான புரளிகள் உலகை வலம் வர ஆரம்பித்து, "யார் இந்த மாயர்கள்?" என்று இவர்களைப் பற்றி அறிந்திடும் ஆர்வத்தை தூண்டின.

மத்திய அமெரிக்க நாடுகளான ஹோண்டுரஸ், குவாதமாலா, பெலீஸ், எல் சால்வடோர், மெக்ஸிகோ போன்ற நாடுகளை உள்ளடக்கி விரிவடைந்திருந்த மாயா நாகரிகம். இன்று, மத்திய அமெரிக்காவில் ஆங்காங்கே பரவியிருக்கின்ற சுமார் ஆறு லட்சம் பேர்களாக சுருங்கியுள்ளது. ஆனால், இவர்கள் மீதான அடக்குமுறை மட்டும் குறைந்ததாக தெரியவில்லை. இனவெறிக்கு இலக்காகியுள்ள இவர்கள் அதிகம் வாழும் மெக்ஸிகோவின் தென்மாநிலமான ஷியபாஸ் (Chiapas) போன்ற பகுதிகளில் இரண்டாம்தர குடிமக்களாகவே நடத்தப்படுகின்றனர். நடைப்பாதையில் வெள்ளையின மக்கள் எதிரே வந்தால் இவர்கள் நடைபாதையில் இருந்து சாலைக்கு இறங்கி விட வேண்டும். சகிக்க முடியாத இந்த இனவெறிதான், சில மாயர்களைப் போராடத் தூண்டி, மெக்ஸிகோ அரசுக்கு எதிரான புரட்சிப்படையை உருவாக்க வைத்தது. 1990களின் மத்தியில், ஸபதிஸ்தா தேசிய விடுதலை ராணுவம் (Ejército Zapatista de Liberación Nacional, EZLN) என்ற அரசுக்கு எதிரான அமைப்பை ஆரம்பித்து, இனவெறி மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிராக போராடத் தொடங்கிய மாயர்களில் ஒரு பகுதியினர் இன்றளவும் போராடிக்கொண்டே இருக்கின்றனர்.

மெக்ஸிகோவில் வாழும் பழங்குடியின மாயர்கள் நூற்றுக்கணக்கில் இஸ்லாத்தை தழுவி வருவதாக 2005ம் ஆண்டு, ஜெர்மனியின் பிரபல ஊடகமான தே ஷ்பீகேல் (Der Spiegel), பலரது கவனத்தையும் ஈர்க்கும்படியான ஒரு செய்தியை வெளியிட்டது. சுமார் 300 மாயன்கள் சமீப காலங்களில் இஸ்லாத்தை தழுவியுள்ளனர்; பள்ளிவாசல், மதரசா, இஸ்லாமிய மையம் போன்றவை இவர்களிடையே காணப்படுகின்றது, மாயர்கள் ஹஜ் செய்கின்றனர்; ஷியபாஸ் மாநிலத்தின் இரண்டாவது பெரிய நகரான சன் கிறிஸ்டோபாலில், ஹிஜாப் அணிந்த பெண்களை காணுவது இயல்பாகி விட்டது, என்பன போன்ற பல சுவாரசிய தகவல்களையும் அந்த கட்டுரை தந்திருந்தது. "தே ஷ்பீகேல்" ஊடகத்தின் இந்த தகவல்கள் உலகளாவிய முஸ்லிம்களுக்கு பெரும் வியப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். சிறிய அளவிலான முஸ்லிம்கள் மெக்ஸிகோவில் வாழ்கின்றனர் என்பது பலரும் அறிந்திருந்த செய்திதான். ஆனால், மாயா இனத்தவரில் முஸ்லிம்கள் என்பது பலருக்கும் தெரிந்திராத புதிய செய்தியாகவே இருந்திருக்க வேண்டும்.

தே ஷ்பீகேலின் 2005ம் ஆண்டு செய்தி, சுமார் முன்னூறு முஸ்லிம் மாயர்கள் மெக்ஸிகோவில் இருப்பதாக தெரிவித்தாலும், மிக சமீபத்திய அல்-ஜசீரா ஊடகத்தின் செய்தி சுமார் ஐநூறு முஸ்லிம் மாயர்கள் அங்கிருப்பதாக தெரிவிக்கின்றது. 1990களின் மத்தியில், ஸ்பானிஷ் மொழி பேசும் ஐரோப்பிய முஸ்லிம்கள் ஆவ்ரெலியனோ பெரேஸ் (Aureliano Perez) என்பவரின் தலைமையில் இஸ்லாமிய அழைப்பு பணி மேற்கொள்ள ஷியபாஸ் மாநிலத்திற்கு வந்தனர். இனவெறிக்கு எதிராக போராடிக்கொண்டிருந்த ஸபதிஸ்தா போராளிகளுக்கு தன்னுடைய ஆதரவை தெரிவித்த பெரேஸ், இஸ்லாமிய போதனைகளுக்கு மாயா பழங்குடியினத்தவர் ஆர்வம் காட்டுவதை அறிந்துக்கொண்டார். ஷியபாஸ்சில் இவர்களது அழைப்புபணிக்கு, இறைவன் கிருபையால், மகத்தான ஆதரவு கிடைக்க அதிக அளவிலான மாயர்கள் இஸ்லாத்தை தமது வாழ்வியல் நெறியாக ஏற்றுக்கொண்டனர். (...there have been reports of indigenous Mayans and Tzotzils converting to Islam in large numbers - wikipedia.)

இதில் கவனிக்க வேண்டிய மற்றொரு தகவல் என்னவென்றால், இப்படி இஸ்லாத்தை தழுவியவர்கள், தங்களோடு அதனை நிறுத்திக்கொள்ளாமல் தங்கள் குடும்பத்தாரிடையே இறைச்செய்தியை கொண்டு செல்வதில் தீவிரமாக இருக்கின்றனர். உதாரணத்திற்கு, தே ஷ்பீகேல் ஊடகம், ஆனஸ்டசியோ கோமேஸ் (Anastasio Gomez) என்ற மாயா சகோதரரை பேட்டி கண்டிருந்தது. இந்த சகோதரர் தன் குடும்பத்தார் அனைவரையும், இறைவன் கிருபையால், இஸ்லாத்தின்பால் கொண்டுவந்து விட்டார். இதில் அவரது நூறு வயது பாட்டியும் அடக்கம். தற்போது இப்ராஹீம் என்று அறியப்படும் ரோமேஸ் தன் போன்ற பதினைந்து பழங்குடியினருடன் சேர்ந்து ஹஜ் கடமையையும் நிறைவேற்றியுள்ளார். "இஸ்லாத்தில் இனம், ஜாதி போன்றவற்றிற்கு இடமில்லை" என்று மகிழ்ச்சியுடன் கூறும் மாயர்களை, மது மற்றும் வட்டி மீதான இஸ்லாத்தின் கடுமையான அணுகுமுறை பெரிதும் கவர்ந்திருப்பதாக RNW (Radio Netherlands Worldwide) தெரிவிக்கின்றது.

அதிவிரைவான மாற்றங்கள் மாயர்களிடையே நடப்பதைக் கண்டு கலவரமடைந்த, மெக்ஸிகோ அரசு மாயர்களுக்கும், அல்-குவைதா போன்ற தீவிரவாத இயக்கங்களுக்கும் தொடர்பு இருக்கலாமென வெளிப்படையாக குற்றஞ்சாட்டியது. அதுமட்டுமல்லாமல், மாயர்களை தீவிரமாக கண்காணிக்கவும் தொடங்கியது. மெக்ஸிகோ அரசின் இந்த குற்றசாட்டிற்கு எந்தவொரு வலுவான ஆதாரமும் இல்லை என்கின்றது RNW. மாயர்களோ இந்த குற்றசாட்டை முற்றிலுமாக மறுக்கின்றனர். மெக்ஸிகோவிற்கு வெளியேயான முஸ்லிம்களுடன் எந்தவொரு தொடர்பும் அற்ற நிலையில் இது எப்படி சாத்தியம்? என்று அவர்கள் கேட்கின்றனர். பல்வேறு எதிர்ப்புகளுக்கு இடையேயும் இஸ்லாம் தொடர்ந்து மாயர்களை தன்னுள் அரவணைத்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. படிப்படியாக நிறைய மக்கள் இஸ்லாத்தை பற்றி அறிவதில் ஆர்வம் காட்டுகின்றனர்" என்று கூறுகின்றார் சன் கிறிஸ்டோபால் நகருக்கு அருகில் உள்ள பள்ளிவாசலின் இமாமான சால்படோர் லோபெஸ் (Salvador Lopez).

தகவல்: Engr.sulthan

ஏர்ளையை.......ம் பக்கத் தொடர்ச்சி

இந்திய மாத இதழ்கள் துல்லியமாக வெளிக் கொணர்ந்துள்ளன.

இக்கூறுவில் சர்வதேச வெளியீடுகளான டைம் சஞ்சிகையும், ப்ரூக்கிங் இன்ஸ்டியூசனும் கட்டுரைகளை வெளியிட்டிருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்று டீஸ்டா செடல்வாட் கூறுகிறார். மார்ச் 16–ஆம் தேதி ப்ரூக்கிங்ஸ் இன்ஸ்டியூசன்ஸ் மோடிக்கு புகழாரம் சூட்டி கட்டுரை வெளியிட்டிருந்தது.

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் பிரதமராக தேர்வுச்செய்ய வாய்ப்புள்ள, மிகவும் மதிக்கத்தக்க(?) அரசியல் தலைவரான மோடிக்கு அமெரிக்கா விசா வழங்கவில்லை என்ற செய்தியுடன் ப்ரூக்கிங்ஸ் இன்ஸ்டியூசனின் கட்டுரை ஆரம்பிக்கிறது. மோடி என்றால் வர்த்தகம். அவரால் இந்தியாவை வழிநடத்த இயலுமா? என்ற தலைப்புடன் டைம் சஞ்சிகை கட்டுரையை வெளியிட்டுள்ளது. நிபுணரான நிர்வாகியாகவும், சர்ச்சைக்குரிய நபராகவும் மோடியை சித்தரிக்கும் கட்டுரை, குஜராத் இனப்படுகொலை மோடியின் பிரதமர் மோகத்திற்கு பின்னடைவாக அமையுமா? என்ற சந்தேகத்தையும் வெளிப்படுத்துகிறது.

டைம் மற்றும் ப்ரூக்கிங்ஸின் கட்டுரைகளுக்கு குஜராத் மாநில காங்கிரஸ் கட்சியும் கண்டனம் தெரிவித்துள்ளது. இக்கட்டுரைகள் ஒருதலைபட்சமானது என்றும், முன்னரே திட்டமிட்டு எழுதப்பட்டுள்ளது என்றும் குற்றம் சாட்டியுள்ளார் காங்கிரஸ் தலைவர் சக்திசின்ஹ் கோஹில்.

மோடியின் ஆட்சியின் கீழ் குஜராத் 12 சதவீதம் வளர்ச்சி அடைந்ததாக கூறும் டைம், 1992–93 காலகட்டத்தில் 16.75 சதவீதம் வளர்ச்சி குஜராத்தில் ஏற்பட்டதை குறிப்பிட்டிருக்க வேண்டும். இக்கட்டுரைகள் குஜராத்திற்கும், இந்தியாவிற்கும் அவமானத்தை பெற்றுத் தருவதாகும். பொய்யை தொடர்ந்து கூறி அதனை உண்மையாக்க நினைக்கும் மோடியின் முயற்சிதான் இவை என்று கோஹில் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குர்ஆனின் இலக்கிய நடை

குர்ஆன் அருளப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை அது மிக ஆழமான ஆராய்ச்சிக்கு உட்படுத்தபட்டிருக்கிறது. அறிவியல், இலக்கியம் என பல பிரிவுகளில் அது ஆராயப்பட்டிருக்கிறது. உலகில் அதிகம் ஆராயப்பட்ட புத்தகங்களில் குரானும் ஒன்று.

குர்ஆனின் இலக்கிய (literary miracles) ஆச்சர்யங்களை இந்த பதிவில் சிறிது பார்க்கவிருக்கிறோம்.

1. குர்ஆனை எந்த மொழிகளிலும் முழுமையாக மொழிப்பெயர்க்க முடியாது என சிலர் சொல்லி கேட்டிருப்பீர்கள். அது முற்றிலும் உண்மைதான். நீங்கள் அரபி தெரியாமல் தமிழ் மொழிப்பெயர்ப்பை மட்டுமே படிப்பவரா? அப்படியெனில் நீங்கள் குர்ஆனின் அழகை மிக சொற்பமே உணர்கிறீர்கள்.

ஏன்? இந்த பதிவின் முடிவில் அதை அறிந்துக்கொள்வீர்கள்.

குர்ஆன் அருளப்பட்ட சமயம், மக்கா நகரம் அரேபிய ஷேக்ஸ்பியர்கள் நிரம்பி இருந்த நேரம். அரபி மொழி புகழின் உச்சத்தில் இருந்த தருணம். அப்படிப்பட்ட சமயத்தில் தான் குர்ஆன் இறங்கி அரேபிய இலக்கியவாதிகளை ஆச்சர்யத்தில் அதிர்ச்சி அடையச்செய்தது. தாங்கள் இதுவரை நினைத்திராத எழுத்து நடை. கொள்ளை அழகான வார்த்தைகள். நெஞ்சை ஊடுருவ செய்யும் பொருள்கள்.

அரேபிய புலவர்களால் நம்ப முடியவில்லை, நேற்று வரை நம்முடன் இருந்த எழுதப் படிக்க தெரியாத முஹம்மதா இந்த அற்புத வாக்கியங்களை கற்பனை செய்தார்? நினைத்துக்கூட பார்க்க முடியாத அதிசயம் இது. வேறு வழியில்லாமல் நம்பினார்கள், ஏனென்றால் இறைவனிடத்தில் இருந்து வந்ததென நம்புவது இன்னும் கடினமானது. அதற்கு முஹம்மது (ஸல்) அவர்களின் கற்பனை வளத்தை பாராட்டுவது எவ்வளவோ மேல்.

நபிகள் நாயகம் (ஸல்) எவ்வளவோ எடுத்து கூறியும் இது இறைவனின் வார்த்தைகள் என்பதை நம்ப மறுத்து விட்டார்கள். குர்ஆன் அடுத்த அதிர்ச்சியை கொடுத்தது.

நீங்கள் உண்மையாளர்களாய் இருந்தால் இது போன்ற ஒரு புத்தகத்தை, அல்லது பத்து சூராக்களை அல்லது ஒரு சூராவையாவது கொண்டு வாருங்கள் என்று அந்த அரபு ஷேக்ஸ்பியர்களை சவாலுக்கு அழைத்தது.

இன்று வரை எந்த அரபியராலும் அல்லது அரபி தெரிந்த எவராலும் குர்ஆனின் சவாலை எதிர்கொள்ள முடியவில்லை.

நீங்கள் கேட்கலாம், சரி முஸ்லிம் அரபியரால் தான் குர்ஆன் போன்ற ஒன்றை உருவாக்க முடியவில்லை, ஏனென்றால் அது அவர்களது உயிர் மூச்சு, குர்ஆன் போன்ற ஒன்றை உருவாக்க அவர்கள் தயக்கம் காட்டலாம், ஆனால் வளைகுடாவில் தான் பத்து மில்லியன் அரேபிய கிருத்துவர்களும், யூதர்களும் இருக்கிறார்களே, அவர்களால் கூடவா குர்ஆனை போன்ற ஒன்றை உருவாக்க முடியவில்லை?.

மிகச்சரியான கேள்விதான். ஆனால் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், யாராலும் குர்ஆனின் சவாலை எதிர்கொள்ள முடியாது, முறியடிக்க முடியாது...

ஏன்?

இதற்கு ஒரு சிறிய உதாரணத்தின் மூலம் விடை சொல்லிவிடலாம்.

நாம் பல புத்தகங்களை படித்திருப்போம், புத்தகத்தின் ஆசிரியர் ஒன்றை கூறிக்கொண்டே வரும்போது நடுவில் ஒரு சொல்லுக்கு அதிக விளக்கம் தேவைப்பட்டால் அந்த சொல்லுக்கு பக்கத்தில் ஒரு எண்ணை (called superscript, eg. Hello1) குறிப்பிட்டு அந்த எண்ணுக்கான விளக்கத்தை அந்த பக்கத்தின் அடியில் (foot note) விளக்கமாக எடுத்துரைப்பார். இதை நாம் பல இடங்களில் பார்த்திருக்கலாம்.



ஆனால் குரானிலோ இது வேறு விதமாக வியப்பளிக்கும் விதத்தில் கையாளப்பட்டிருக்கிறது. எப்படியென்றால், ஒன்றை கூறிக்கொண்டே வரும்போது நடுவில் ஒரு வார்த்தைக்கோ அல்லது ஒரு சம்பவத்திற்கோ அதிக விளக்கம் தேவைப்பட்டால் அந்த வாக்கியம் அதே இடத்திலேயே நிறுத்தப்பட்டு எந்த சொல்லுக்கு விளக்கம் தேவையோ அதை விளக்க சென்றுவிடுகிறது. அந்த சொல்லை விளக்கியபிறகு மறுபடியும் பழைய இடத்திலிருந்து தொடர்கிறது.

இங்கு நீங்கள் ஒன்றை மிக கூர்மையாக கவனிக்க வேண்டும். ஒன்றை முதலில் சொல்லிவிட்டு நடுவில் வேறொன்றை விளக்கிவிட்டு மறுபடியும் பழைய இடத்திலிருந்து தொடர்கிறது.

குரானின் தனித்துவம் என்ன தெரியுமா?

ஒன்றை சொல்லிக்கொண்டே வரும்போது அதை ஒரு சத்தத்திலும் (ஒரு வார்த்தையை உச்சரிப்பதால் ஏற்படக்கூடிய சத்தம்), நடுவில் ஒரு சொல்லுக்கு விளக்கம் தேவைப்பட்டால் அந்த விளக்கத்தை வேறொரு சத்தத்திலும், அந்த விளக்கத்தை முடித்துவிட்டு பழைய இடத்திலிருந்து தொடரும்போது மறுபடியும் பழைய சத்தத்திலும் தொடர்கிறது (Qur'an distinguishes those in an amazing audio format).

எளிமையாக சொல்லப் போனால் இரண்டு பழைய சத்தத்திற்கு நடுவில் ஒரு புது சத்தம். புது சத்தம் ஒரு சொல்லுக்கான விளக்கத்தை நடுவிலே அறியவைப்பதற்காக.

குரானை ஓதுபவரும் எளிதிலே அறிந்து கொள்வார், இது ஒரு சொல்லுக்கான விளக்கம் என்று. என்ன வியப்பின் நுனிக்கே சென்று விட்டீர்களா? இது குரானின் அதிஅழகான (The royal literature) இலக்கணத்திற்கு ஒரு சிறிய உதாரணம் தான்.

இப்போது சொல்லுங்கள், எந்த அரேபிய புலவரால் சத்தத்தை மாற்றி மாற்றி, அதே சமயம் பொருளும் மாறாமல் ஒரு முழு சூராவை கொண்டுவரமுடியும்? சத்தத்தை மாற்றுவதெல்லாம் அவர்களால் நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒன்று. குர்ஆன் முழுக்க இந்த நடை பின்பற்றப்படுகிறது. பொருள் மாறாமல் சுவை மாறாமல், படிப்பவரை கட்டிப் போடும் வல்லமை. ஒரு சிறிய உதாரணம் தான் இது. இன்னும் பல பல காரணங்கள் இருக்கின்றன ஏன் அவர்களால் முடியவில்லையென்று. இன்ஷா அல்லாஹ் மற்றுமொரு பதிவில் பகிர்ந்து கொள்கிறேன்.

இப்போது என் முதல் கேள்விக்கு வாருங்கள், ஏன் மொழிப்பெயர்ப்புகளின் மூலம் குர்ஆனின் முழு அழகையும்/அற்புதத்தையும் உணர முடியாது?

விளக்கம் இந்நேரம் கண்டுபிடித்திருப்பீர்கள், வார்த்தைகளை மொழிபெயர்க்கலாம் (இதுவும் குர்ஆனை பொறுத்தவரை கடினந்தான். அதனால் தான் குர்ஆனின் வார்த்தைகளை மொழிபெயர்க்காமல் அதன் அர்த்தங்களை மட்டுமே மொழிபெயர்க்க முயல்கின்றார்கள்), சத்தங்களை?

Qur'an is the most difficult book on the face of earth to translate...

2. குர்ஆன் அருளப்பட்ட சமயம், நான் ஏற்கனவே கூறியது போல் அரபி மொழி அதன் உச்சத்தில் இருந்த நேரம். அப்பொழுது அரபி மொழி இலக்கணம் மூன்றாக அறியப்பட்டிருந்தது.

a. கவிதைநடை (poetry), அரபியில் "ஷிஹார்" எனப்படும்.

b. உரைநடை (common speech), அரபியில் "முர்ஸல்" எனப்படும்.

c. கவிதையும் உரையும் சேர்ந்த நடை (combination of both poetry and common speech), அரபியில் "சாஜ்" எனப்படும்.

அரேபிய மக்களோ அல்லது இலக்கியவாதிகளோ ஒன்றை சொல்ல அல்லது எழுத நினைத்தால், அது மேற்கூறிய ஒன்றில் அமைந்து விடும்.

ஆனால் குர்ஆனை பார்த்து இந்த அரேபிய இலக்கியவாதிகள் அதிர்ந்ததற்கு மற்றுமொரு காரணம் குர்ஆனின் வசனங்கள் மேற்கூறிய எந்த நடையிலும் இல்லை என்பதுதான். குர்ஆனின் நடை அவர்கள் இதுவரை கண்டிராதது, கற்பனை செய்ய முடியாதது.

சாதாரண மக்களுக்கோ, அந்த வசனங்களின் நெஞ்சை ஊடுருவச்செய்யும் பொருளும், அந்த பொருளை தாங்கி வந்த சொற்களின் அசாதாரண நடையும், அந்த சொற்கள் உச்சரிக்கப்பட்ட விதமும் மனதை கொள்ளை கொண்டன.

இன்று வரை குர்ஆன் போன்றை ஒன்றை எவராலும் உருவாக்க முடியாததற்கு இதுவும் ஒரு காரணம்.

குர்ஆன் அருளப்பட்ட நாளிலிருந்து இன்று வரை முஸ்லிம்கள் அதிசயமாக பார்ப்பது குர்ஆனை மட்டுமே. நம்முடைய பலமும் அதுதான்.

அன்றும் சரி இன்றும் சரி குர்ஆன் ஆச்சர்யங்கள் அளிப்பதில் தவறியதில்லை, ஆனால் இதையெல்லாம் ஆராயாத, காதில் போட்டுக்கொள்ளாத சிலர் இருப்பதுதான் ஆச்சர்யம்.

"அவர்கள் இந்த குர்ஆனை கவனமாக சிந்திக்க வேண்டாமா, அல்லாஹ் அல்லாத பிறரிடமிருந்து வந்திருந்தால், இதில் ஏராளமான முரண்பாடுகளை நிச்சயமாக அவர்கள் கண்டிருப்பார்கள்" - (குர்ஆன் 4:82)

இறைவனே எல்லாம் அறிந்தவன்...,

இறைவன் நம் அனைவருக்கும் நேர்வழியை காட்டுவானாக...ஆமீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையோடு.......1ம் பக்கத் தொடர்ச்சி

வாழ்க்கைக்கு மரங்கள் பெரும் உதவியாக இருப்பதாக, "மர உதவி" என்ற திட்ட அலுவலகர் Andrew Dokurugu விவரிக்கிறார். பழங்கள், இலைகள், பலகை, மரப்பட்டை என மரத்தினால் கிடைக்கும் அனைத்தும் கிராமத்தினரின் வாழ்வுக்கு முக்கிய ஆதாரங்களாக இருக்கின்றன என அவர் கூறுகிறார் மற்றுமோர் ஆப்ரிக்க நாடான கானாவில், வீட்டுக்கு வீடு மரம் வளர்க்கும் திட்டத்தின் மூலம் ஆறு இலட்சம் கிராம மக்கள் பயன் அடைந்துள்ளனர் என்று Dokurugu சொல்கிறார்.

மரங்களே அழியாச் சொத்து! புத்தர்க்கு ஞானம் பிறந்தது போதி மரத்தடியில். வர்த்தமானருக்கு ஞானம் கிடைத்தது அசோக மரத்தடியில். வங்காரி மாத்தாய்க்கு நோபெல் அமைதி விருது கிடைக்கக் காரணமாக இருந்ததும் மரங்கள்தான். கடந்த செப்டம்பர் 25ம் தேதி புற்றுநோயால் இறந்த வங்காரி மாத்தாய் 2004ம் ஆண்டு நோபெல் அமைதி விருது பெற்றார். இந்த விருதை வென்ற முதல் ஆப்ரிக்கப் பெண் என்ற பெருமையும் இவருக்கு உண்டு. கென்யாவைச் சேர்ந்த இவர், ஆப்ரிக்க மக்கள், வறுமையின் காரணமாக, மரங்களை வெட்டிப் பணம் சம்பாதித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அதனால் கிரீன் பெல்ட் (Green Belt) என்ற இயக்கத்தைத் தொடங்கி அதன் மூலம் மரங்களின் அவசியத்தையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் ஆப்ரிக்க மக்கள் மத்தியில் எடுத்துச் சொன்னார். "உங்களுக்குப் பணம் வேண்டுமானால் மரத்தை நடுங்கள். அவை உங்களுக்குப் பணம் தரும்." என்றார். அவ்வாறே ஆயிரக்கணக்கில் மரக்கன்றுகள் நடப்பட்டன. அம்மரங்கள் ஆப்ரிக்கப் பெண்களுக்குப் பணம் சம்பாதிக்கும் தொழிலாகவும் மாறிவிட்டன. இராணா என்பவர், வட சென்னையில் தங்க சாலை தொடங்கி கும்மிடிப்பூண்டி வரை இதுவரை ஏறத்தாழ 10,000க்கும் மேற்பட்ட மரங்களை நட்டு அனைவருக்கும் முன்மாதிரியாகத் திகழ்கிறார். நேபாளத்தைத் தாயகமாக கொண்ட இராணா என்கிற தேக் பகதூர், 75 வயதை நெருங்கிய பின்னும் தொய்வில்லாமல் ஏறத்தாழ 50 ஆண்டுகளாக இப்பணியைத் தொடர்ந்து செய்து வருகிறார். அன்பர்களே, நாமும் ஓர் ஆப்ரிக்க மாத்தாயாய், ஓர் இராணாவாக செயல்படலாமே!

ஒருமுறை இலண்டன் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைகழகத்தில் இருக்கின்ற De La Barr என்ற ஆய்வுக்கூடத்தில் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. அங்கே இரண்டு பாத்திகளில் விதை விதைத்தார்கள். இரண்டிலும் ஒரே மாதிரியான விதை. ஒரே மாதிரியான உரம், ஒரே விதமான பாத்தி - இப்படி இரண்டுமே எந்த வேறுபாடும் இல்லாமல் இருந்தன. ஆனால் ஒரு பாத்திக்கு அருகில் பாப் இசையை முழக்கினார்கள். அடுத்த பாத்திக்கு அருகில் பாரம்பரிய சாஸ்திரிய இசையை முழக்கினார்கள். நம் எல்லாருக்குமே தெரியும் பாப் இசை இன்றைய தலைமுறையில் பெரும்பாலானவர்களின் இசை. இந்த இசைதான் இன்றைய தலைமுறையைக் குத்தாட்டம் போட வைக்கிறது. ஆனால் சாஸ்திரிய இசை அப்படியல்ல. De La Barr ஆய்வுக்கூடம் நடத்திய ஆய்வின் முடிவு நமக்கு வியப்பைத் தருகிறது. பாப் இசை முழக்கப்பட்ட பாத்திகளில் விதைகள் முளைவிடவே இல்லை. அப்படித் தப்பித் தவறி முளைவிட்டதெல்லாம் பலமாக இல்லை. பாதி காய்ந்த நிலையிலே இருந்தன. ஆனால் சாஸ்திரிய இசை இசைக்கப்பட்ட பாத்திகளிலிருந்த விதைகள் சாதாரணமாக மலருவதைவிட ஒன்றரை மடங்கு பெரிதாகவும் அதிக எண்ணிக்கையிலும் துளிர்கள் விட்டிருந்தன.

இந்த வேறுபாடு பற்றி ஒரு பெரியவர் சொல்லும் போது, "இசையிலிருந்து ஒலி அலை எழும்ப முடியுமானால் மனிதர்களின் செயல்களிலிருந்து அலைகள் எழும்பாதா என்ன?" என்று கேட்கிறார். ஒரு மெய்யியலாளரும் சொன்னார்: "அகங்காரமுள்ள மனிதன் கொடூரமான அலைகளை எழுப்புகிறான். அகங்காரமற்ற மனிதன் தன்னைச் சுற்றி சாஸ்திரிய இசையை பரப்புகிறான்" என்று. ஆகவே அன்பு நெஞ்சங்களே, நாம் நல்ல எண்ண அலைகளைப் பரப்பினால் நம்மைச் சுற்றி எல்லாமே நல்லதாக நடக்கும். எனவே நமக்குத் தேவையானது இயற்கையை அழிக்காது அதனை அன்பு செய்யும் ஒரு வாழ்க்கை. இயற்கையோடு நல்லிணக்கம் கொள்ளும் வாழ்க்கை. அப்போதுதான் இந்த உலகம் பசுமையாக இருக்கும். நாம் எல்லாரும் நோய் நொக்காடின்றி பஞ்சம் பட்டினியின்றி நிம்மதியாய் வாழ முடியும்

12 வருடங்களுக்கு முன்னர் அநுராதபுரம் வீரவெவ காட்டுப் பகுதியில் வீழ்ந்து நொருங்கிய விமானப்படைக்குச் சொந்தமான அன்டனோவ்-26 ரக விமானம் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலாலேயே வீழ்ந்து நொருங்கியுள்ளமை இப்போது தெரியவந்துள்ளது.

அண்மையில் பொலிஸாரினால் கிளிநொச்சியில் கைதுசெய்யப்பட்ட புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து இந்தத் தகவல் தெரியவந்துள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.



## பன்னிரெண்டு வருடங்களுக்கு முன்னர்....!

## புலிகளின் தாக்குதலிலேயே அன்டனோவ்-26 விழுந்து நொருங்கியது

புலிகள் இயக்கத் தலைவர்களின் ஆலோசனைக்கு அமைய தாங்கள் இருவருமே வில்பத்து காட்டுப் பகுதியிலிருந்து ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டதாக் நமது வாக்குமூலத்தில் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி 40 பேருடன் யாழ்ப்பாணத் திலிருந்து கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்த விமானம் அநுராதபுரம் காட்டுப் பகுதியில் உடைந்து விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பயணம் செய்த அனைவருமே உயிரிழந்தனர். ரஷ்ய நாட்டு நான்கு பிரஜைகள், இராணுவம், பொலிஸ் அதிகாரிகளுடன் விமானப்படை விமானிகளும் இந்த விபத்தில் உயிரிழந்தனர்.

விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே இந்த விமானம் விழுந்து நொருங்கியிருக்கலாம் என அப்போது நம்பப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் இது புலிகளின் விமானத் தாக்குதல் மூலம் இடம்பெற்ற சம்பவம் என இப்போது உறுதியாகியுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் விசாரணையின்போது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதை ஒப்புக்கொண்ட இந்த இரு சந்தேகநபர்களும் தாக்குதல் நடத்துவதற்கு மறைந்திருந்த வில்பத்து காட்டுப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு தாக்குதல் நடத்திய இடத்தைக் காண்பித்தனர். தாக்குதல் நடத்தப்பட்ட இடத்திலிருந்து இரு ஏவுகணை வெற்று பகுதிகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

காட்டுப் பகுதியில் எவ்வாறு மறைந்திருந்தார்கள் என்பது பற்றியும் விமானத்தை இலக்குவைத்து நடத்திய தாக்குதல் முறைபற்றியும் சந்தேகநபர்கள் பொலிஸாருக்குக் காண்பித்தனர். சந்தேகநபர்கள் இருவரும் அநுராதபுரம் மஜிஸ்ரேட் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதுடன், தாக்குதல் தொடர்பான விபரங்களையும் நீதிமன்றத்தில் வழங்கியுள்ளனர்.

சந்தேகநபர்களை எதிர்வரும் ஏப்ரல் 23ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார். பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## அமெரிக்க ராணுவ வீரன் மீது மரணத் தண்டனைக்கான குற்றம் பதிவு! – லியோன் பனேட்டா !



ஆப்கானிஸ்தானில் பெண்களும், குழந்தைகளும் உள்பட 16 பேரை வெறித்தனமாக சுட்டுக் கொலைச் செய்த அமெரிக்க ராணுவ சார்ஜண்ட் ரொபர்ட் பேல் மீது மரணத் தண்டனைக்கான குற்றம் பதிவுச் செய்துள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லியோன் பனேட்டா தெரிவித்துள்ளார். படுகொலையைச் செய்த ராணுவ வீரனிடம் அமெரிக்க ராணுவ சட்டத்தின் கீழ் விசாரணை நடத்தப்படும் என்றும், மரணத்தண்டனை வரை கிடைக்கும் வாய்ப்புள்ளதாகவும் கிர்கிஸ்தானுக்கு செல்லும் வழியில் விமானத்தில் உடன் பயணித்த செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் பனேட்டா கூறினார்.

அண்மையில் அதிகாலை தெற்கு காந்தஹார் மாகாணத்தில் பஞ்சவாய் மாவட்டத்தில் உள்ள கொஸாமி, நஜீபான் ஆகிய கிராமங்களின் வீடுகளில் நுழைந்து தூங்கிக்கொண்டிருந்த அப்பாவி மக்களை வெறிப்பிடித்த அமெரிக்க ராணுவ வீரன் கண்மூடித்தனமாக சுட்டதில் குழந்தைகளும், பெண்களும் உள்பட 16 பேர் பலியானர். துப்பாக்கியால் சுட்ட ராணுவ வீரன் குறித்த தெளிவான விபரங்களை அமெரிக்கா இதுவரை வெளியிடவில்லை.

கொல்லப்பட்ட ஒவ்வொருவரின் குடும்பத்துக்கும் தலா 46,000 டொலரும் காயப்பட்டவர்களுக்கு தலா 10,000 டொலரும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

கபொத(சாத) ......1ம் பக்கத் தொடர்ச்சி

இம்முறை வெளியாகியுள்ள க. பொ. த சாதாரண தர பெறுபேறுகளுடன் கடந்த வருட பெறுபேறுகளை ஒப்பிடுகையில் சகல பாடங்களிலும் ஏ சித்தி பெற்றவர்கள் 2010 ஆம் ஆண்டு 3057 மாணவர்கள், 2011 இல் 3908 மாணவர்கள், சகல பாடங்களிலும் "எவ்" புள்ளிபெற்று சித்தியடையாதவர்கள் 2010 ஆம் ஆண்டு 14,411 மாணவர்கள், 2011 ஆம் ஆண்டு 12,705 மாணவர்கள் எனவும் பதிவாகியுள்ளது என பரீட்சை ஆணையாளர் டபிள்யு. எம். என். ஜே. புஷ்பகுமார தெரிவித்தார்.

பரீட்சை மண்டபத்தில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த தவறியவர்கள் 410 பேர் உட்பட 663 பேரினதும் பரீட்சை பெறுபேறுகள் அனுப்பப்படவில்லை. ஆள்மாறாட்டம், பார்த்தெழுதுதல் போன்ற சம்பவங்களுக்காக இவர்களது பெறுபேறுகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

டொப் டென் பட்டியல்: 1. உதேஷிகா மதுஷானி, விசாகா வித்தியாலயம், 2. அனுஷ நிம்ரோட் பெரேரா, மாத்தளை, சயன்ஸ் காலேஜ், மூன்றாமிடம் இரண்டு பேர்3. தில்மி சமாதினா, ரம்புக்கன, பின்னவல மத்திய கல்லூரி. பாரத மதுஷங்க, தர்மராஜ கல்லூரி, கண்டி. (5ம் இடமும் இருவர்) 5. தமிந்த கருணாரட்ன, குளியாபிட்டி மத்திய கல்லூரி. ஹிருனி உதாரா, சுஜாதா வித்தியாலயம், மாத்தறை, (7ம் இடமும் இருவர்) 7. கஜிருனி தாரங்க, மல்லியதேவ ம.வி, குருநாகல, திலினி தாரங்க, மாத்தறை, சுஜாதா வித்தியாலயம். 9. புஷ்பிகா ரத்நாயக்க, பண்டாரநாயக்க ம.வி, கம்பஹா. (10ம் இடம் மூவர்) 10. சமிக சுரங்க, தேவி பாலிகா, மதுஷா கதுருகமுவ, விசாகா வித்தியாலயம், நளினி விஜேரட்ன, மகாமாய மகளிர் கல்லூரி, கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா ஏற்கனவே உடைந்துவிட்டது!

'உடைந்த குடியரசு'. தேசத்தின் மனசாட்சியாகத் திகழும் அருந்ததி ராயின் சமீபத்திய கட்டுரைகளின் தொகுப்பு இது. காலச்சுவடு பதிப்பகம் சார்பில் வெளியாகி இருக்கும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பு வெளியீட்டு விழாவுக்காக சென்னை வந்திருந்தவரைச் சந்தித்தோம்.

**இந்தியா உடைந்துவிடும் என்று முடிவு செய்துவிட்டீர்களா?**

இந்தியா ஏற்கெனவே உடைந்துவிட்டது. இந்தியர்கள் எல்லோருமே மனதளவில் உடைந்து, பிரிந்துதான் நிற்கிறார்கள். இங்கு யாருக்குமே மற்றவர்களின் பிரச்னைகளில் கவலை இல்லை.

இலங்கைத் தமிழர் பிரச்னைக்காகப் பேசுபவர்கள் காஷ்மீர்பற்றிப் பேசுவது இல்லை. தண்டகாரண்யக் கொடுமைகளை எதிர்த்துப் போராடுபவர்கள் கூடங்குள மக்களுக்காகக் குரல் கொடுப்பது இல்லை. இதற்கு முக்கியக் காரணம், இங்கு ஒவ்வொருவரும் அவரவர் பிரச்னையை மட்டுமே முக்கியமானதாகக் கருதுவதுதான். ஒரு வகையில், இந்தப் பிரிவுக்கு அரசுதான் காரணம். என்னைக் கேட்டால், இந்தியாவின் மிகப் பெரிய பிரிவினைவாத இயக்கம் இந்தியாவை ஆளும் அரசாங்கம்தான்!



அருந்ததிராய்

**ஒருபுறம் அரசாங்கத்தைப் பிரிவினைவாத இயக்கம் என்கிறீர்கள். மறுபுறம் மாவோயிஸ்ட்டுகளைக் காந்தியவாதிகள், ஏதோ பக்தர்கள் என்கிறீர்கள்?**

நக்சலைட்டுகள் இயற்கையோடு ஒட்டி வாழ்கிறார்கள். துப்பாக்கிக் குண்டுகளைக்கூட அவர்கள் மறுசுழற்சி செய்து பயன்படுத்துகிறார்கள். காந்தியின் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை என்ற கோட்பாட்டை இன்றைக்கு ஓரளவேனும் பின்பற்றுவது நக்சலைட்டுகள்தான் என்று ஒரு கட்டுரையில் குறிப்பிட்டு இருந்தேன். அதைத்தான் நீங்கள் குறிப்பிடுவதுபோல சிலர் திரித்துவிட்டனர். பயங்கரவாதத்தை ஒருபோதும் நான் நியாயப்படுத்தியது இல்லை.

ஆனால், நக்சலைட்டுகள் பக்கமும் நியாயம் இருப்பதை நான் பேசினேன். நீங்கள் நக்சலைட்டுகள் என்று குறிப்பிடும் தண்டகாரண்யப் பகுதியில் ஆயுதங்களைத் தூக்கிப் போராடும் போராளிகள் உண்மையில் யார்? அவர்களில் ஆகப் பெரும்பான்மையினர் ஆதிவாசிகள். பழங்குடிகள். அந்த மண்ணின் பூர்வகுடிகள். அவர்கள் யாருக்காகப் போராடுகிறார்கள்? தங்கள் நிலத்துக்காக மட்டும் அல்ல... இந்த தேசத்தின் அரிய சொத்துக்களான கனிமவளங்களைக் காக்கவும் போராடுகிறார்கள்.

நீங்கள் இது இரண்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள். நாம் அரசு என்று குறிப்பிடும் அமைப்பு பன்னாட்டுப் பெரு நிறுவனங்களிடம் தேசத்தின் சொத்துக்களைக் கூறுபோட்டு விற்கத் துடிக்கிறது. நாம் பயங்கரவாதிகள் என்று குறிப்பிடுபவர்களோ அதைக் காக்கப் போராடிக்கொண்டு இருக்கிறார்கள். இவர்களில் யாருடைய நியாயத்தை நான் பேச வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? மாவோயிஸ்ட்டுகள் ஆயுதம் ஏந்திப் போராடுவதை நான் சரி என்று சொல்லவில்லை. ஆனால், அவர்களுடைய போராட்டத்தின் நோக்கம் நியாயமானது என்று சொல்வதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை.

**மாவோயிஸ்ட்டுகளின் ஆயுதப் பாதையை நீங்கள் ஏற்கவில்லை சரி. ஆனால், அன்னா ஹஸாரேயின் இயக்கத்தையும் நீங்கள் நிராகரிக்கிறீர்களே?**

"அன்னா ஹஸாரே குழு எப்போது தலை எடுத்தது? இந்த நாட்டின் ஒட்டு மொத்த மக்களும் இரண்டாம் தலை முறை ஊழலை மிகப் பெரிய பிரச்னையாகப் பார்க்க ஆரம்பித்த தருணத்தில், மன்மோகன் அரசை எல்லா இயக்கங்களும் கடுமையாகத் தாக்க ஆரம்பித்த தருணத்தில்தான் உருவெடுத்தார் ஹஸாரே. சரியாகச் சொன்னால், மக்களின் வெறுப்பைச் சரியான தருணத்தில் திசை திருப்பினார் ஹஸாரே.

வெறும் சட்டங்களால் மட்டுமே ஊழலை ஒழித்துவிட முடியுமா? அது ஒரு போலி நம்பிக்கை. சமகால இந்தியாவின் மிகப் பெரிய அபாயம் - பெரு நிறுவனங்கள். இரண்டாம் அலைக்கற்றை ஊழல் உட்பட, இந்தியாவின் மிகப் பெரிய ஊழல்களில் அவர்களுக்கு முக்கிய இடம் உண்டு.

அவர்களைப் பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசாத ஹஸாரே குழு, இன்னும் சொல்லப்போனால், அவர்களுடைய முழு ஆதரவுடன் தங்கள் போராட்டத்தை முன்னெடுக்கும் ஹஸாரே குழு - ஊழலை ஒழிக்கும் என நம்புவது மிகப் பெரிய மடத்தனம்!

**எதையுமே அவநம்பிக்கையுடன் பார்க்கிறீர்கள்... மக்களுக்கு என்ன வழிதான் இருக்கிறது? நீங்கள் ஓர் அவநம்பிக்கைவாதியா?**

இதை நான் ஆட்சேபிக்கிறேன். எங்கெல்லாம் மக்கள் நியாயத்துக்காகப் போராடுகிறார்களோ... அங்கெல்லாம் - குறிப்பாக யாரெல்லாம் புறக்கணிப்புகளோடு போராடுகிறார்களோ அங்கெல்லாம் நான் கை கோத்து இருக்கிறேன் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

"தமிழகத்தில் மூவர் தூக்குத் தண்டனைக்கு எதிராக ஒரு பெரும் மக்கள் அலை எழுந்தது. ஆனால், தேசிய அளவில் பல அறிவுஜீவிகள் இந்தப் போராட்டம் தொடர்பாக வாயே திறக்கவில்லை. நீங்கள் உட்பட?"

மனிதனை மனிதனே கொல்லும் காட்டுமிராண்டித்தனத்துக்கு எதிராக நான் எப்போதுமே குரல் கொடுத்துவருகிறேன். ஒரு நாகரிக சமூகத்தில் மரண தண்டனை அவமானகரமான ஒரு செயல்பாடு. தீவிரவாதிகள் ஒரு குறிப்பிட்ட அமைப்பின் மூலமாகக் கொலை செய்கிறார்கள். ஆனால், தூக்குத் தண்டனை நம் மக்களின் பெயரால் அரசாங்கம் செய்யும் கொலை. அரசாங்கமும் கொலைகாரர்களும் ஒன்றா? தூக்குத் தண்டனை கண்டிப்பாகக் கூடாது... அது யாருக்காக இருந்தாலும் சரிஎன்பதே என் நிலைப்பாடு.

அதே சமயம், நான் வாயை மூடிக்கொண்டு இல்லை. நீங்கள் குறிப்பிடும் காலகட்டத்தில் பெரும்பான்மையினரால் பொருட்படுத்தப்படாத வட கிழக்கு மாநில மக்கள் போராட்டங்களில் நான் கவனம் செலுத்திக்கொண்டு இருந்தேன்.

**புகுஷிமாவுக்குப் பிந்தைய சூழலில், அணு சக்தி தொடர்பான இந்திய அரசின் நிலைப்பாடு சரியா? குறிப்பாக, கூடங்குளம் விவகாரத்தில்?**

ஜப்பானில் நில நடுக்கம் ஏற்பட்டபோது நான் அங்கேதான் இருந்தேன். இந்த நில நடுக்கம், சுனாமி, அணு உலை விபத்துக்களால் ஜப்பான் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டு இருக்கும் இழப்புகள் சொல்லி மாளாதவை. மிகக் கொடுமையானவை. ஆனால், பல விஷயங்களை ஜப்பானிய அரசு மறைத்துவிட்டது. நமக்கு இங்கு தெரியும் தகவல்கள் ரொம்பவும் குறைவானவை என்பதே உண்மை.

புகுஷிமா விபத்துக்குப் பிறகு, பல நாடுகள் தங்கள் அணு மின் திட்டங்களை நிறுத்திவிட்டன. அணு சக்திப் பயன்பாடு குறித்தே மறுபரிசீலனை செய்ய ஆரம்பித்துவிட்டன. நம்முடைய அரசுதான் எந்த உறுத்தலும் இல்லாமல் இன்னும் பல அணு மின் நிலையங்களைத் திறக்க உள்ளது. அரசியல் கட்சிகளும் இதில் இரட்டை வேடம் போடுகின்றன.

ஒரு சாதாரண பிளாஸ்டிக் குப்பையைக்கூட ஒழுங்காகக் கையாளத் தெரியாத இந்த அரசாங்கம், அணு உலைகளைப் பராமரித்து, கழிவுகளைப் பத்திரமாக வெளியேற்றப்போவதாகக் கூறுவது நகைப்புக்கு உரியது.

**காவிரியைத் தொடர்ந்து முல்லைப் பெரியாறு அணை விவகாரத்திலும் தமிழகம் வஞ்சிக்கப்படுகிறது. இந்தச் சூழலை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

இரு மாநில மக்கள் இடையே கொந்தளிப்பான உணர்ச்சிகள் நிலவும் இந்தச் சூழலில், நான் என்ன சொன்னாலும் அது நிலைமையை மேலும் மோசமாக்கவே செய்யும். அதனால், இப்போது இதுபற்றி நான் பேசவிரும்ப வில்லை.

**சரி, உடைந்துகொண்டிருக்கும் இந்தியாவை எப்படித்தான் காப்பது?**

மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு வேண்டுமாயின், மக்கள் தாங்களே ஒன்றிணைந்து போராட வேண்டும். பெரிய தலைவர்கள் வருவார்கள் என எதிர்பார்த்துக் காத்திருப்பது உதவாது. கூடங்குளம் மக்களின் போராட்டம் அதற்கு ஒரு நல்ல உதாரணம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியக் கிண்ணப் போட்டியில் சச்சின் தனது 100வது சதத்தைப் பெற்றார்



அண்மையில் நடைபெற்ற ஆசிய கிண்ணத்தொடரில் பங்களாதேஷ் உடனான போட்டியின்போது 114 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் டெண்டுல்கர் டெஸ்ட் மற்றும் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் மொத்தமாக 100 சதங்களை குவித்த உலகின் முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

அவர் ஏற்கெனவே, 188 டெஸ்ட் போட்டிகளில் 51 சதங்களையும் 461 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 48 சதங்களையும் பெற்றிருந்தார். இறுதியாக கடந்த உலகக்கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்காவுடனான போட்டியின்போது டெண்டுல்கர் சதம் குவித்தார். அது அவரின் 99 ஆவது சதம் ஆகும். அதன்பின் கடந்த ஒரு வருடகாலத்தில் அவர் பல்வேறு ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றிபோதிலும் தனது 100 ஆவது சதத்தை பெறத் தவறினார்.

இதுவரை டெஸ்ற் போட்டிகளில் 51 சதங்களையும், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 49 சதங்களையும் பெற்றுள்ள சச்சின் டெண்டுல்கர், டெஸ்ற் போட்டிக்களில் 65 அரைச்சதங்களையும், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 96 அரைச்சதங்களையும் பெற்றுள்ளார்.

சர்வதேசப் போட்டிகளில் அவுஸ்ரேலியாவுக்கெதிராக 20 சதங்களையும், இலங்கைக்கெதிராக 17 சதங்களையும், தென்னாபிரிக்காவுக்கெதிராக 12 சதங்களையும், இங்கிலாந்திற்கெதிராக 9 சதங்களையும், நியூசிலாந்துக்கெதிராக 9 சதங்களையும், சிம்பாப்வேக்கு எதிராக 8 சதங்களையும், பாகிஸ்தானுக்கெதிராக 7 சதங்களையும், மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக 7 சதங்களையும், பங்களாதேஷிற்கு எதிராக 6 சதங்களையும், கென்யாவிற்கு எதிராக 4 சதங்களையும், நமிபீயாவிற்கு எதிராக ஒரு சதத்தையும் பெற்றுள்ளார்.

இதுவரை சர்வதேசப் போட்டிகளில் அதிக சதங்களைப் பெற்றவர்களில் சச்சின் டெண்டுல்கர் 100 சதங்களுடன் முதலிடத்திலும், இரண்டாம் இடத்தில் 71 சதங்களோடு றிக்கி பொன்டிங், மூன்றாமிடத்தில் 59 சதங்களோடு ஜக்ஸ் கலிஸ், நான்காமிடத்தில் 53 சதங்களோடு பிரைன் லாரா என்போரும் காணப்படுகின்றனர்.

பங்களாதேஷிற்கு எதிராக சச்சின் டெண்டுல்கர் பெற்றுக் கொண்ட சதம் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பங்களாதேஷிற்கு எதிராக சச்சின் டெண்டுல்கர் பெற்றுக்கொண்ட முதலாவது சதமாகவும் அமைந்தது. எனினும் இந்தப் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் சிறிது மெதுவாகத் துடுப்பெடுத்தாடியிருந்தார். 147 பந்துகளில் 114 ஓட்டங்களையே அவர் பெற்றிருந்தார். தென்னாபிரிக்காவுக்கெதிராக அவர் பெற்றுக்கொண்ட ஆட்டமிழக்காத 200 ஓட்டங்களைப் பெற அவர் பெற்றுக்கொண்டதும் அதே 147 பந்துகள் ஆகும்.

இதே போட்டியில் டெண்டுல்கர் 2000 பௌண்ட்ரிகளைப் பூர்த்தி செய்து மற்றுமொரு சாதனை படைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

# 100 கோடி டொலரில் பிரமாண்ட தீவு



நட்சத்திர கால்பந்து வீரர் ரொனால்டோ இடம் பெற்றுள்ள ரியல் மாட்ரிட் அணி அனைத்து வசதிகளுடன் கூடிய பிரமாண்டமான தீவை 100 கோடி டொலர் செலவில் கடலுக்குள் அமைக்கவுள்ளது. 2022 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்து போட்டி கட்டாரில் நடைபெறவுள்ளது. இதையொட்டி இலட்சக்கணக்கான ரசிகர்கள் கட்டார் வருவார்கள். இதனால் மேற்கு ஆசியாவுக்கு வரும் உலகக் கால்பந்து ரசிகர்களைக் கவரும் விதத்தில் பிரமாண்டமான தீவு "ரிசோர்ட்" ஒன்றை அமைக்க ரியல்மாட்ரிட் முடிவு செய்துள்ளது.

உலகின் செல்வ செழிப்புமிக்க நகரமான டுபாய் அருகே கடலுக்குள் இந்த தீவு ரிசோர்ட் அமைக்கப்பட உள்ளது. இதற்காக 100 கோடி டொலர் செலவிட ரியல்மாட்ரிட் அணி தீர்மானித்துள்ளது.

இந்த பிரமாண்டமான தீவு ரிசோர்ட்டில் 450 அறைகளுடன் கூடிய 25 மாடிகள் கொண்ட ஐந்து நட்சத்திர தங்கும் விடுதி, அத்தோடு 60 தனித்தனி பங்களாக்களும் கட்டப்படவுள்ளன. மிகப் பிரமாண்டமான பொழுதுபோக்குப் பூங்கா ஒன்றும் இந்தத் தீவில் அமைக்கப்படவுள்ளது.

மேலும் கடற்கரை அருகில் 5 நட்சத்திர அந்தஸ்துடன் புதிய கால்பந்து மைதானம் மற்றும் அருங்காட்சியகம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. இந்த தீவு கிட்டத்தட்ட ஒரு குட்டி ஸ்பெயின் போலவே இருக்கும்.

2015 ஆம் ஆண்டு இந்தத் தீவு ரிசோர்டின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து விடுமென்று ரியல்மாட்ரிட் அணி அறிவித்துள்ளது.

# புதிய சாதனையை நோக்கி மெஸ்ஸி




ஆர்ஜென்ரீனா காஸ்பந்து அணியின் கப்டன் லயோனல் மெஸ்ஸி. இவர் கிளப் போட்டிகளில் பார்சிலோனா அணிக்காக விளையாடி வருகிறார். அந்த அணிக்காக இதுவரை 8 சீசன்களில் விளையாடியுள்ள அவர் 232 கோலடித்துள்ளார். அவர் இன்னும் ஒரு கோலடிக்கும் பட்சத்தில் பார்சிலோனா அணிக்காக விளையாடி அதிக கோலடித்தவரான ஸ்பெனின் செசார் ரோட்ரிகஸின் (233 கோல்) சாதனையை சமன்செய்து விடுவார்.

சில நாட்களுக்கு முன்வரை ரோட்ரிகஸ் 235 கோலடித்ததாகக் கூறப்பட்டது. ஆனால், சமீபத்தில் பார்சிலோ கிளப் மற்றும் லா வன்கார்டியா நாளிதழ் ஆகியவை இணைந்து நடத்திய கணக்காய்வு, பார்சிலோனாவின் ஆவணங்கள் ஆய்வு ஆகியவற்றின்படி அவர் 232 கோல்கள் மட்டுமே அடித்துள்ளது தெரியவந்துள்ளது.

இதன்படி இப்போது மெஸ்ஸி ஒரு கோல் மட்டுமே ரோட்ரிகஸை விட குறைவாக அடித்துள்ளார். கிரானிடா அணிக்கெதிரான ஆட்டத்தில் மெஸ்ஸி ஒரு கோலடிக்கும் பட்சத்தில் ரோட்ரிகஸின் சாதனையை சமன்செய்வார். 2 கோலடித்தால் அவரின் சாதனையை முறியடிப்பார்.

ரோட்ரிகஸ் 1940 முதல் 1950 வரை பார்சிலோனா அணிக்காக விளையாடியுள்ளார். தொடர்ச்சியாக 7 சீசன்களில் விளையாடி 232 கோல்கள் அடித்துள்ளார். ஸ்பெயினின் தேசிய அணியில் 1945 முதல் 1952 வரை விளையாடியுள்ள அவர், 12 போட்டிகளில் 6 கோலடித்துள்ளார். அவர் தனது 74 ஆவது வயதில் காலமானார்.

# இருபது - 20 உலகக் கிண்ணத்திற்கு ஆப்கான், அயர்லாந்து தகுதி

இலங்கையில் நடைபெறவுள்ள இருபது- 20 உலகக் கிண்ண போட்டியில் விளையாட ஆப்கானிஸ்தான், அயர்லாந்து அணிகள் தகுதி பெற்றன.

டுபாயில் நடைபெற்ற 16 அணிகள் பங்கேற்ற உலகக் கிண்ண தகுதிகாண் போட்டி தொடரின் இறுதிப் போட்டியில் விளையாட முன்னேறியதன் மூலமே ஆப்கான், அயர்லாந்துக்கு இந்த வாய்ப்பு கிட்டியது.

இதன்படி வரும் செப்டெம்பர் மாதம் ஆரம்பமாகும் இருபது - 20 உலகக் கிண்ணத்தில் ஆப்கான் அணி "ஏ" பிரிவில் நடப்பு சாம்பியன் இங்கிலாந்து, இந்தியாவும் ஆரம்ப சுற்றில் விளையாடவுள்ளதோடு அயர்லாந்து "பி" பிரிவில் அவுஸ்திரேலியா, மேற்கிந்திய தீவுகளுடன் போட்டியிடவுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் நடந்த உலகக் கிண்ண தகுதிகாண் இறுதி போட்டியில் அயர்லாந்து, ஆப்கானிஸ்தானை 05 விக்கெட்டுகளால் வீழ்த்தி சாம்பியனானமை குறிப்பிடத்தக்கது.

# 11வது ஆசியக் கிண்ணத்தை வென்றது பாகிஸ்தான்

11ஆவது ஆசியக்கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி - பங்களாதேஷ் அணியை 2 ஓட்டங்களால் வெற்றிகொண்டு, ஆசியக்கிண்ணத்தை இரண்டாவது முறையாக வெற்றிகொண்டது.

இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்ந்தெடுத்தது. அதற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. 237 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 234 ஓட்டங்களை மாத்திரமே பெற்று, 2 ஓட்டங்களால் வெற்றி வாய்ப்பை தவறவிட்டது

"தெளிவு" மாத இதழ் இளைய சமுதாயத்தினரின் குறிப்பாக மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தவும் அவர்களது எழுத்தாற்றலுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் உயர் நோக்கிலும் ஆரம்பிக்கப்பட்டதாகும். பொதுவாக அனைத்து வயதினரும் வாசித்துப் பயன்பெறக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த கலை, இலக்கிய மாத இதழின் வளர்ச்சிக்கு உங்கள் ஒத்துழைப்பையும் ஆலோசனைகளையும் நாம் நாடி நிற்கின்றோம். பின்வரும் இடங்களிலும் எமது பத்திரிகைகளைப் பெற்றுக் கொள்ளலாம். வேறு முகவர்கள் இதனை விற்பனை செய்ய விரும்பினால் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். கவர்ச்சியான கழிவு தரப்படும்.

| | |
|---|---|
| Zeenath Dharbar Book Depot, | Symond's Road, Maradana. |
| | New Street, Weligama. |
| Rizwies, | 114, Galle Rd., Wellawatte. |
| Poobalasingam Book Shop | Colombo 6 |
| New City Stores | Akurana. |
| Hira Book Shop & Communication, | Akurana. |
| Humairas | No. 3, Hill Street, Kandy. |
| Abdullah & Co. | Super Market, Nawalapitiya. |
| Nawshad Traders, | Main Street, Akkaraipatru. |
| People's Shopping Centre, | Main Street, Addalaichenai. |
| Haniffa Hotel & Tea Room | Main Street, Kalmunai. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org